பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 14 ஞாயிற்றுக்கிழமை (27-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:63

## போர்க் கைதிகள் விடுவிப்பை வரவேற்கின்றது அமெரிக்கா

வாஷிங்டன்,ஜன.27

தங்கள் காவலில் இருந்த போர்க் கைதிகள் பத்துப்பேரை விடுதலைப் புலிகள் நல்லெண்ண அடிப்படையில் விடுவித்திருப்பதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

புலிகளின் இந்த நல்லெண்ண நடவடிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பெண் பேச்சாளர் ஜோ-ஆன் புறொகோபோவிக் தெரிவித்திருக்கிறார்.

இருதரப்பும் போர்நிறுத்தத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடித்திருப்பதை பாராட்டி வரவேற்றுள்ள அமெரிக்கா, இலங்கையில் தொடரும் கொடிய உள்நாட்டுப் போருக்கு நிலையான ஒரு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை இந்நடவடிக்கைகள் புலப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை - மிகவிரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள அமெரிக்க ராஜாங்க துணைச் செயலர் ரிச்சேர்ட் ஆர்மிரேக் தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள இலங்கை அமைச்சரும் சமாதான முயற்சிகளுக்கான அமைச்சரவைக் குழுவின் உறுப்பினருமான மிலிந்த மொறகொடவை அடுத்த வாரம் சந்தித்துப் பேசு நடத்தவுள்ளதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா நழுவல் போக்கு!

### குற்றஞ்சாட்டுகிறார் ஹக்கீம்

கொழும்பு,ஜன.27

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்திய அரசு நழுவல் போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம். பிரதமரின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய அரசு திட்டவட்டமாக எதனையும் கூறமறுத்து வருகிறது.

விடுதலைப் புலிகளை அந்நியப் படுத்திவிட்டு நாட்டின் இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வுகாண முடியாது.

தற்போது நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளை எவரும் குழப்ப முற்படக்கூடாது - இந்த முயற்சிகள் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடியதாக அமையவேண்டும் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-6-9)

# பொருள் தடை நீக்கம் வெறும் கண்துடைப்பு!

# நல்லெண்ண சூழலை உருவாக்க உதவாது!!

## அரசின் செயலைச் சாடுகின்றார் வன்னி பிரஜைகள் குழுத் தலைவர்

மல்லாவி,ஜனவரி27

**"புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கான பொருளாதாரத் தடை நீக்கம் என்பது வெறும் கண்துடைப்பு. வந்துபோன லொறிகளின் கணக்கு வழக்குகளைக் காட்டும் அரசியல் சித்து விளையாட்டு. இந்தத் தடை நீக்கத்தை தற்போது நடைமுறைப்படுத்தும் விதத்தைப் பார்த்தால் அது, சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தை எட்டுவதற்கு வழிசமைக்காது என்பது தெளிவு."**

**- இவ்வாறு கூறினார் வன்னிப் பிரதேச பிரஜைகள் குழுத் தலைவரும் கிளிநொச்சி அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் தலைவருமான வண. எம்.எக்ஸ்.கருணாரத்னம் அடிகளார். மல்லாவியில் வைத்து 'உதயன்' பிரதிநிதிக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

வன்னியின் தற்போதைய நிலைவரம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் பன்னிரண்டு வருடங்களாக வன்னிப் பிரதேசம் முழுவதையும் - தரைமட்டம் வரை - முற்றாக - அழித்துவிட்டு இப்போது வெறும் பேச்சுக்கு மட்டும் பொருளாதாரத் தடையை நீக்கி என்ன பயன்?

இங்குள்ள மக்களுக்கு சொந்த வீடுவாசல் என்று கட்டட வசதிகளுடன் கூடிய அமைப்பு ஏதும் இல்லை; ஒழுங்கான வீதிகள் இல்லை; குளக் கட்டுமானம் எதுவும் நீண்டகாலமாகச் செய்யப்படவில்லை. ஆஸ்பத்திரிகள், கல்விக் கூடங்கள், சந்தைகள் எதுவும் கட்டடங்களாக இல்லை. தளபாடங்கள், உபகரணங்கள் இல்லை. இவற்றின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்குக் கூட அரச திணைக்களங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

இந்த நிலையில் பொருளாதாரத் தடையை நீக்கிவிட்டதாக அறிவித்து, லொறிகளை அனுப்புவதாக எண்ணுக் கணக்குக் காட்டுவதால் என்ன பயன்?

இது அறுவடைக் காலம். இங்கு உரத்தை களஞ்சியப்படுத்த வசதி

(02ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாயீஸ் முஸ்தபா, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளரும் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைப் பீடாதிபதியுமான என்.செல்வகுமாரன் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இவர்கள் இருவரும் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம். (ஐ-10-180)

## போதையில் உதைத்த கணவனை கொன்று புதைத்தார் மனைவி!

### மட்டக்களப்பில் திடுக்கிடும் சம்பவம்

மட்டக்களப்பு,ஜன.27

தினமும் மதுபோதையில் வீட்டிற்கு வரும் கணவனின் அடி, உதைகளைத் தாங்கமுடியாத மனைவி கணவனுக்கு சாராயத்தில் நஞ்சைக் கலந்துகொடுத்து கொலை செய்தார். பின்னர் சடலத்தை வெளியில் காட்டாது சமையலறையில் 2 அடி ஆழத்தில் புதைத்து வைத்தார்.

இந்தத் திடுக்கிடும் சம்பவம் மட்டக்களப்புப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

மட்டக்களப்பு, ஆரையம்பதி, செல்வாநகர்ப் பகுதியில் வசித்து வந்த சித்திரம் இராஜேந்திரம் (வயது 43) என்ற குடும்பஸ்தர் தினமும் மதுபோதையில் வீட்டிற்குச் சென்று மனைவியையும், குழந்தைகளையும் அடித்துத் துன்புறுத்தி வந்துள்ளார்.

கடந்த தைப்பொங்கல் தினத்தன்றும் நிறைபோதையில் வந்த கணவன் மனைவியையும், குழந்தைகளையும் மோசமாகத் தாக்கி அவர்களைச் சித்திரவதை செய்தார். இவரது சித்திரவதைகளைப் பொறுக்க முடியாத மனைவி அன்று இரவு குழந்தைகள் நித்திரையானதும் கணவனுக்கு சாராயத்தில் நஞ்சைக் கலந்து குடிக்கக் கொடுத்துள்ளார்.

சாராயத்தைக் குடித்த கணவன் உயிரிழந்ததும் அவரது சடலத்தை சமையலறையில் 2அடி ஆழக் குழி ஒன்றைத் தோண்டி யாருக்கும் தெரியாமல் புதைத்து வைத்துள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறை கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு,ஜன.27

தம்மீதான விசாரணையைத் துரிதமாக்கி விரைவிலேயே தங்களை விடுதலை செய்யக்கோரி களுத்துறை சிறைக் கைதிகள் சுழற்சிமுறையில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## விவேகானந்தரின் சிலை மீது கல் வீச்சு!

யாழ்ப்பாணம்,ஜன.27

திருநெல்வேலி ஆடியபாத வீதியில் இராமகிருஷ்ணர் ஆலயத்தில் உள்ள சுவாமி விவேகானந்தரின உருவச் சிலை மீது நேற்றுமுன்தினம் இரவு விஷமிகள் கல்வீசித் தாக்கியிருக்கின்றனர், இதனால் அந்த உருவச்சிலையைச் சுற்றி அமைந்திருந்த கண்ணாடிக்கூண்டு சேதமடைந்தது.

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜயத்தின் நூற்றாண்டு விழா நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் சமயத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (ஜ-180)

## திருத்தச் சட்டமூலம்

கொழும்பு,ஜன.27

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது குறித்து திருத்தச் சட்டமூலத்தை சமர்பிக்க புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அம்பாறை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது தெரிந்ததே. (ஐ-6)

## ஆயுதக் கொள்வனவு இனி இல்லை

கொழும்பு,ஜன.27

அரசு புதிதாக ஆயுதக் கொள்வனவு எதனையும் மேற்கொள்ளமாட்டாது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

எம்மிடம் உள்ள தேவையற்ற ஆயுதங்கள் அழிக்கப்படவேண்டும் இவற்றை அழிப்பது குறித்தும், குறைந்த விலையில் வேறுநாடுகளுக்கு விற்பனை செய்வது குறித்தும் ஆராய்ந்து வருகிறோம். விரைவில் இதுபற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## நாகர்கோயிலில் இளைஞர் கைது!

கொழும்பு,ஜன.27

நேற்றுமுன்தினம் அதிகாலை 2.15 மணியளவில் நாகர்கோயில் கடற்கரை ஊடாகப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் சந்தேகத்துக்கிடமாகப் பிரவேசிக்க முயன்ற இளைஞர் ஒருவரைப் படையினர் கைது செய்துள்ளனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

லூக்காஸ் அன்ரன் (வயது 19) என அடையாளம் காணப்பட்ட இந்த நபர் மேல் விசாரணைக்காக பருத்தித்துறை பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-8)

## ஜயலத் மடு செல்கிறார்

கொழும்பு,ஜன.27

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன நாளைமறுதினம் மடுவுக்கு செல்லவிருக்கின்றார்.

வன்னிக்கான விஜயத்தை மேற்கொண்டு நாளை புறப்படும் அவர் அன்று பிற்பகல் 2.30 மணிக்கு மடுப் பகுதிக்கான மின்சார விநியோகத்தை பிரமணாளங்குளம் பகுதியில் வைத்து வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

மறுநாள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மடுவுக்குச் செல்லும் அமைச்சர் அங்கு மருத்துவ முகாம் ஒன்றை நடத்தவிருக்கின்றார். (ஐ-3-6-9)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 - 06 - 1925



ஆண்டவன் அடியில் 05 - 02 - 1993

## அமரர்
## வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்
(மாயவர்)

ஐயா!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்பட்ட எங்கள் அன்புத் தெய்வமே!
நீர் எமைப் பிரிந்து ஆண்டுகள் எட்டு உருண்டோடிவிட்டன
ஆனாலும் எம்மனதில் ஆறவில்லை இத்துயரம்
அனுதினமும் உம் நினைவில் வாழுகின்றோம் அவனியிலே!

*காளிகோயிலடி,*
*மல்லாகம்.* (C/20512)

மனைவி,மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# நெஞ்சைவிட்டகலாத ஏழாம் ஆண்டு நினைவுத்துளிகள்

அன்னையின் மடியில் 05 ★ 04 ★ 1926



ஆண்டவன் திருப்பாதத்தில் 15 ★ 01 ★ 1995

## அமரர் ஏரம்பு சோதிலிங்கம்
திதி : 27.01.2002

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே
குலம் சிறக்க வைத்த உத்தமரே
வீரத்தின் பிறப்பிடமே
ஞாலத்தில் புகழ் பூத்தவரே
அருக்கோர் மன்மதனே
அன்பின் சோதியே
ஆற்றலின் உறைவிடமே
பண்பின் இலக்கணமே
நாம் தலைநிமிர்ந்து வாழவைத்த உத்தமரே
எம் குலப் புண்ணியத்தால் வந்துதித்த தெய்வமே
எம்மை விட்டகன்று ஏழாண்டென்ன
ஏழேழு யுகம் கழிந்தாலும் ஆறாது
எம்நினைவு எம் இதயத்தில் இறையாகிவிட்ட
உத்தமராகிய தங்களை என்றென்றும் துதித்து நிற்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உங்கள் புண்ணியாத்மாவுடன் ஒன்றித்து நிற்கும்*
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்

*கொக்குவில்.* (C/20507)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சற்குணநாதன்

தலங்காவற்பிள்ளையார் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சற்குணநாதன் நேற்று (26.01.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் துசாகரன் (ஜேர்மனி), தயாளன் (லண்டன்), வித்தியா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பராசக்தி, தங்கப்பொன், சோமாவதி, லோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் பரமேஸ்வரன், குமாரசாமி, தளையசிங்கம், உலகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தலங்காவற்பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.* (012)

தகவல்:
து.செல்லம்மா
(சிறியதாய்)

# பொருள் தடை நீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏதும் இல்லை. இப்போது லொறியில் யூரியா அனுப்புவதாகப் பிரகடனப் படுத்துவதால் என்ன பிரயோசனம்? யூரியாவை வாங்க விவசாயிகளிடம் இன்னும் பணம் வரவில்லை. வந்த யூரியாவை வாங்கினாலும் களஞ்சியப்படுத்தமுடியாது. களஞ்சியப்படுத்தினாலும் நீண்டகாலம் செல்ல அது கெட்டுப்போய் விடும்.

### மந்திரத்தால் மாங்காய் பறிப்பதா?

கடந்த இரண்டு தசாப்த காலமாக வன்னிக்குரிய அபிவிருத்தி நிதியை அரசு வழங்கவில்லை. மாறாக வன்னி மக்களின் அடிப்படைச் சொத்துக்களை தனது இராணுவ இயந்திரம் மற்றும் பொருளாதாரத் தடை போன்ற கெடுபிடிகளால் அரசு அழித்து ஒழித்துவிட்டது. நிதி இல்லாமல் - அடிப்படை மூலதன வசதிகளற்று - திண்டாடும் வன்னிக்குப் பொருள்களை அனுப்புவதாகக் கூறினால் அவற்றை வாங்குவதற்கு வன்னி மக்களும், வன்னியிலுள்ள அரச நிறுவனங்களும் மந்திரத்தால் மாங்காய் பறிப்பதா?

இவ்வளவு காலமாக இங்கு அனுப்பாமல் வெட்டிய நிதியை அரசு உடனடியாக வழங்க முன்வரவேண்டும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்தை வழமைநிலைக்கு கொண்டுவருவதற்கான அடிப்படைக் கட்டுமானப்பணிகளை அவசர அவசரமாக நிறைவேற்றவேண்டும். அதன் பின்னர்தான் இந்தப் பொருளாதாரத் தடை நீக்கத்தால் மக்களுக்குப் பயன் கிட்டும். அதன் மூலம் நல்லெண்ணப் புறச்சூழ்நிலை ஏற்படும்.

இலங்கையின் கடலோரத்தில் மூன்றில் இரண்டு பங்கு, தமிழீழக் கரையோரத்திலேயே உள்ளது. ஆனால் அதை நம்பியிருக்கும் மீனவ சமூகம் நடுவீதியில் விடப்பட்டிருக்கின்றது. கடலன்னையின் மடியில் தொழில் செய்யும் உரிமைகள் மறுக்கப்பட்டு பிச்சை எடுக்கும் நிலையில் இருக்கும் அவர்கள் லொறிகளில் வரும் பொருள்களைப் பார்த்து கொட்டாவி விடுவதா? முதலில் அவர்களைத் தொழில் செய்ய அனுமதியுங்கள். அவர்களது உழைப்புக்கும், பிழைப்புக்கும் வழிசெய்தால்தானே அவர்களின் வாழ்க்கை சராசரி நிலைக்கு வரும்!

### நீர்ப்பாசனம் பாதிப்பு

தனது இராணுவ நடவடிக்கைகளின்போது இலங்கை இராணுவம், பங்கர்கள் அமைத்து வாய்க்கால்களைத் தூர்த்து, நீண்ட பாதுகாப்பு அணைகளைக் கட்டி வன்னியின் நீர்ப்பாசனச் சமநிலையையே கெடுத்துவிட்டது. வன்னியில் இம்முறை கடும் மழை; பெருவெள்ளம். ஆனால் இங்கு இரண்டாவது பெரியகுளமான வவுனிக்குளம் நிரம்பக்கூட இல்லை.

இராணுவம் அமைத்த பாதுகாப்பு அணைகளினால் வந்த வினை இது.

புளியங்குளம், ஓமந்தை வரையான பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்கள் எங்கும் இலங்கை இராணுவம் கண்ணிவெடிகள், மிதிவெடிகளை விதைத்துவிட்டுச் சென்றிருக்கின்றது. இதனால் விவசாயிகள் தமது விளைநிலங்களுக்கு இறங்க முடியாமல் பட்டினிச் சாவுடன் வீதியில்.

அழித்தது நீங்கள். பட்டினி போட்டது நீங்கள். இந்த மக்களுக்குரிய

(10ஆம் பக்கம் பார்க்க)


## விற்பனைக்கு

AVERY மேடைத் தராசு (பெரிது), றெஜிபோம் சீற் தேவையான அளவுகளில் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-*

**SIRI RAM-NATHAN STORES**
213C, Hospital Road,
Jaffna.
Phone: 2916 (005)


## மண்ணெண்ணெய் விநியோகம்

புலோலி, நெல்லியடி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, தெல்லிப்பழை, அளவெட்டி, அச்சுவேலி ஆகிய 7 ப.நோ.கூ.சங்கங்களுக்கு நேற்றுமுன்தினம் மண்எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தற்சமயம் 2 லட்சத்து 35ஆயிரம் லீற்றர் மண்எண்ணெய் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் கூறினார். (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குணரத்தினம் கண்மணி

**(முன்னாள் ஆசிரியை, குருநாகல் பரஹகதெனிய மகா வித்தியாலயம்)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் கண்மணி 21.01.2002 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன் (கனடா), சிவமலர், கருணாமலர் (குளமங்கால் றோ.க.த.க. வித்தியாலயம்), ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மலோஜினி (கனடா), சத்திவேல் (யாழ்.கட்டடத் திணைக்களம்), மோகனசுந்தரம், புஸ்பலதா ஆகியோரின் மாமியாரும் லவன், யதுஸ்வினி (கனடா), திவிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.* (008)

தகவல்:
பிள்ளைகள்.

## வேலுப்பிள்ளை ஸ்ரீகாந்தராசா

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் G.B.S. லேன் (3ஆம் கட்டை ஒழுங்கை) கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஸ்ரீகாந்தராசா நேற்று (26.01.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாராசத்தியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்ததேவி (யா.மா.கூ. அச்சகம்), ஸ்ரீபத்மநாதன் (வேலணை பிரதேச சபை உபஅலுவலகம், மண்டைதீவு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ராசேஸ்வரி (உபதபால் அதிபர், ஆனைப்பந்தி) அவர்களின் மாமனாரும் ஸ்ரீலக்சனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*G.B.S. லேன்,*
*(3ஆம் கட்டை ஒழுங்கை),*
*கல்வியங்காடு.* (010)

தகவல்:
ஸ்ரீ.ஸ்ரீபத்மநாதன்
(மகன்)

## நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்

சந்தை வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த நாகேந்திரம் ஜெகதீஸ்வரன் நேற்றுமுன்தினம் (25.01.2002) வெள்ளி அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் இராசபூபதி தம்பதியரின் அன்பு மகனும் லோகநாதன் (தபாலதிபர், யாழ்ப்பாணம்), ஸ்ரீசோமஸ்கந்தமூர்த்தி (கிராம அலுவலர், வலி.வடக்கு), சொர்ணாம்பிகைமலர் (ஆசிரிய கலாசாலை, பலாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யசிந்தாவின் மைத்துனரும் தர்சினி, நிதர்சன் (மாணவர்கள் - யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தை வீதி,*
*சுன்னாகம்.* (009)

தகவல்:
நா.ஸ்ரீசோமஸ்கந்தமூர்த்தி
(சகோதரன் - கிராம அலுவலர்)

## குருநாதர் நமசிவாயம்

கோப்பாய், பூதர்மடத்தைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதர் நமசிவாயம் அவர்கள் 25.01.2002இல் கனடாவில் காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி (ஆஸ்திரேலியா), தயாளினி (கனடா), விமலினி (ஜேர்மனி), ஜெயந்தினி (குவைத்), சசிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் விஜயநாதன் (ஆஸ்திரேலியா), சிவபாதசுந்தரம் (கனடா), கதிர்காமலிங்கம் (ஜேர்மனி), உமாபுத்திரன் (குவைத்), திருமகள் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகஜன், நித்லா, பிரியங்கா, துவாரகா, கதீஷ்யா, ருஷந்தியா, நாகபூஜா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2002இல் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தாவில் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*
*கனடா. T.P. 514 2568097.*

தகவல்:
க.விஜயநாதன்
(ஆஸ்திரேலியா-(02)9746 7042) (007)



# வைத்தீஸ்வரா வாழ்வளிப்பாய்! வாழ்த்துகின்றோம்!!



யாழ்ப்பாணத்தில் தோன்றிய பழம்பெரும் பதியாம் வாலாம்பிகா - சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரநாதர் புதிய எழிற்கோபுரம் பெற்று இன்று பெரும் சாந்தி பெறும்போதில், விழாச்சிறப்புறவும், அப்பனின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்டவும் வேண்டி வாழ்த்தி இறைஞ்சுகிறேன்.

*பழமுதிர்சோலை*
*காரைநகர்.* (011)

கனகசபை தர்மகுலசிங்கம்
(சிவதொண்டன்)

உதயன்

## நல்லெண்ணம் பெருகட்டும்

தங்கள் காவலில் இருந்த சிங்களப் போர்க்கைதிகள் பத்துப்பேரை விடுவித்ததன்மூலம் விடுதலைப் புலிகள் வெளிப்படுத்திய நல்லெண்ண சமிக்ஞைக்குப் பதில் நடவடிக்கையாக அரசும் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்து தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்ட வேண்டும்.

அவ்வாறு செய்வதற்கு அரசு தவறினால் சிறைகளில் உள்ள தமிழ்க் கைதகளின் விடுதலைக்காகத் தென் பகுதிப் பெற்றோர்களாகிய நாங்கள் போராட்டம் நடத்துவோம்.

அண்மையில் வன்னி சென்று திரும்பிய காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்காரவும், பிரபல வர்த்தகப் பிரமுகரும் சமாதான ஆர்வலருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் கூட்டாக மேற்கண்ட கோரிக்கையை விடுத்திருக்கின்றனர்.

பத்துக் கைதிகளைப் புலிகள் விடுவித்தசமயம் வன்னியில் புலிகள் பிரதேசத்துக்குச் சென்றிருந்த சுமார் இரண்டாயிரம் தென்னிலங்கை மக்களுடன் சேர்ந்து அங்கு விஜயம் செய்த இவர்கள் இருவரும் ஸ்ரீலங்கா அரசிடம் விடுத்திருக்கும் இந்தக் கோரிக்கை இனங்களுக்கிடையே பரஸ்பரம் புரிந்துணர்வு மற்றும் நட்புறவைக் கட்டி எழுப்ப - அதற்காகப் பாடுபடும் - சக்திகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த ஆகக் குறைந்தது பத்து தமிழ்ச் சிறைக் கைதிகளையாவது உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று இவர்கள் கேட்டிருக்கின்றனர்.

கைதிகளை விடுவித்த புலிகளின் நடவடிக்கைக்குப் பதிலாக அரசுத் தரப்பில் இருந்து எத்தகைய நல்லெண்ண சமிக்ஞைகளும் இதுவரை வெளிப்படுத்தப்படாத நிலையில் தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காகப் போராட்டம் நடத்துவோம் என்ற குரல் தென்னிலங்கையில் ஒலித்திருக்கிறது.

அரசு இன்னமும் செயலில் காட்டாத நல்லெண்ணத்தை தென்னிலங்கைச் சிங்கள மக்கள் முதன் முறையாகத் தன்னிச்சையாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இது இலங்கையின் இன நெருக்கடியில் ஓர் ஆரோக்கியமான திருப்புமுனையாகக் கொள்ளப்படவேண்டியது. ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கானது அல்ல; தங்கள் மண்ணில் தங்கள் வாழ்வுக்கும் இருப்புக்கும் சுதந்திரத்துக்குமாகத் தமிழ் மக்கள் நடத்துகின்ற போராட்டமே என்பதை தென்னிலங்கை மக்கள் உணரத் தொடங்கி, அதன் வெளிப்பாடாக சரியான திசையில் அரசை வழிநடத்தவும் அவர்கள் தயாராகிவிட்டதை இது உணர்த்துகின்றது.

தங்களிடம் போர்க் கைதிகளாக இருப்போரை சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞையாகப் புலிகள் அவ்வப்போது விடுவித்து வந்ததும் -

ஆனால் அத்தகைய சமிக்ஞைகளுக்கு அரசுத்தரப்பில் இருந்து அந்தந்த நேரங்களில் நல்லெண்ண மாகப் பதில் சமிக்ஞைகள் வெளிக்காட்டப்படாமல் இருந்து வந்திருப்பதும் -

கடந்த கால உண்மைகள்.

இதுகுறித்து கடந்தவாரமும் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

வெலிக்கடை, பூஸா, பிந்துனுவெவ என்று தென்னிலங்கைச் சிறைகளில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் விசாரணையின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருககின்றனர். அவர்கள் அவ்வப்போது கொடும் சித்திரவதைகளுக்ும், படுகொலைகளுக்கும் ஆளாகி வந்துள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகளுக்கோ அன்றி அவர்களது விடுதலைக்கோ அரசு இன்னமும் உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இந்த நிலைமையிலும் சமாதான முயற்சிகளுக்குப் பலம் சேர்க்கும் நோக்குடன் - நல்லெண்ண வெளிப்பாடாக - புலிகள் மீண்டும் ஒரு தடவை போர்க்கைதிகளை விடுவித்திருக்கின்றனர். ஆனால் அதற்கு அரசிடமிருந்து எத்தகைய பதில் சமிக்ஞை வரப்போகின்றது என்பதை தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் எதிர் பார்த்துக் காத்திருக் கின்றனர்.

அரசு என்ன பதில் தரப்போகிறது?

## பெண்களுக்கான கிரிக்கெட் வடக்கு - கிழக்கில் அறிமுகம்!

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் முதற் றடவையாக வடக்கு - கிழக்கில் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை அமைச்சினால் மாவட்ட விளையாட்டு அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கைக்கு அமைய யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.ரூபசிங்க மேற்கொண்டுள்ளார்.

பிரதேச செயலக மட்டத்தில் மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகளாக இவை நடத்தப்படும்.(ம-86)

## குடாநாட்டுக்கு பொருள்களை கூடுதலாக அனுப்ப ஏற்பாடு

கொழும்பு,ஜன.27

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைத் தடுப்பதற்காக கூடுதலான பொருள்களை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கூடுதலான கப்பல்களை வடக்கே அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடனடியாக கூ.மொ.வி. நிறுவனம் மூலம் ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி அனுப்பப்படவிருக்கின்றது.

அத்துடன் வர்த்தகர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி அங்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொருள்கள் அனுப்பும் விவகாரத்தில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனினும் அவரின் ஒத்துழைப்பு இன்றியே எமது அமைச்சு பொருள்களை அங்கு அனுப்பிவைக்கும - என்று அவர் தெரிவித்தார்.(ஐ-3)

## நாட்டு நடப்பு

### யாழ்நகர்க் காட்சி - 4

உள்ளத்தில் உறுதிவேண்டும் ஊக்கமும் உணர்வும் வேண்டும்
கள்ளமிலா மனது வேண்டும் கடமையில் பக்தி வேண்டும்
தெய்வமே தாய்மையென்று தெரிந்திட வேண்டும் மக்கள்
உய்ந்திட உயர்வுகிட்ட உகந்ததோர் மார்க்கம் சொன்னேன்.

அன்பொடு நகரபிதாவை அதன்பின் கூட்டி வந்து
இவ்புற காட்டிவிட்டு இன்னுரை பலவும் நல்க
பொன்னொளிர் மகுடம் சூடு போற்றியே புகழ்ந்து பேச
வண்ணமார் பட்டினத்தின் வனப்பினை காக்க முந்த.

- விகடகவி

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடுவோம்

### காணாமற்போன படையினர் பாதுகாவலர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.27

சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலைப் புலிகள் 10 போர்க் கைதிகளை விடுவித்துள்ளனர். அதைப் பார்த்தாவது அரசும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும். இல்லையேல் அவர்களது விடுதலைக்காக நாம் போராட்டம் நடத்துவோம்.

- இவ்வாறு காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கமும் 'சோலோ' அமைப்பும் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

காணாமற்போன படையினர் சங்கத் தலைவர் ஈ.பி.நாணக்காரவும் 'சோலோ' அமைப்பின் தலைவர் தேசமான்ய லலித்கொத்தலாவலையும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த ஆகக்குறைந்தது 10 தமிழ்ச் சிறைக் கைதிகளையாவது விடுவிக்கவேண்டும்.

வன்னிக்கு நேரடியாகச் சென்று புலிகளுடன் பேசி, எமது பிள்ளைகளை விடுவித்துள்ளோம். ஆனால் இந்த வசதியும் வாய்ப்பும் தென் பகுதிச் சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளின் பெற்றோர்களுக்கு இல்லை. ஒருவேளை உணவுக்கே கஷ்டப்படும் இவர்களுக்குப் பல்வேறு தடைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. எனவே இங்கு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலைக்குத் தென் பகுதிப் பெற்றோர்களாகிய நாம் போராட்டம் நடத்துவோம் - என்று இருவரும் கூறினர்.

தேசமான்ய லலித் கொத்தலாவலை கூறியதாவது:-

தென்பகுதிச் சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் பெரிய குற்றவாளிகள் இல்லை. தேசிய அடையாள அட்டை இல்லை, புலிகளின் நண்பர்கள், புலிகளுக்கு ஒருவேளை உணவு கொடுத்தவர்கள், புலிகளைப் பற்றித் தகவல் கொடுக்கவில்லை என்பன போன்ற சிறு காரணங்களுக்காகச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்களே சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக நாம் போராட்டம் நடத்துவோம் - என்றார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் புலிகளால் விடுவிக்கப்பட்ட 7 போர்க் கைதிகளும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## உளவள துணையாளர் பயிற்சி இன்று

வலி.வடக்கு,ஜன.27

அகவொளி நிலையத்தினால் நடத்தப்படவுள்ள குடும்ப உளவளத் துணையாளருக்கான பயிற்சிவகுப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அகவொளி நிலையப் பணிப்பாளர் வணபிதா.எஸ்.ஜே. இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வணபிதா.ஜே.நிக்ளஸ°ம், சிறப்பு விருந்தினராக சாந்திகம் உளவளத் துணை நிலையத் தலைவர் என். கனகரத்தினம் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-86)

## ஆண்டு நிறைவு விழா

தென்மராட்சி,ஜன.27

கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வரா சனசமூக நிலையம், வேதாரணியேஸ்வரா பாலர் பாடசாலை ஆகியவற்றின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வேதாரணியேஸ்வரா முன்பள்ளி மண்டபத்தில் சிவஸ்ரீ ச.சட்டநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபைத் தலைவர் ப.ஜெயராசாவும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை உபதலைவர் ப.இரவீந்திரனும் கலந்துகொள்வர். (ம-117)

## நாடாளுமன்றத்தைக் கலக்கிய தொட்டாற்சுருங்கிச் செடி விவகாரம்!

கொழும்பு,ஜன.27

தென்பகுதியில் வேகமாகப் பரவி வரும் தொட்டாற்சுருங்கிச் செடியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் அமைச்சர்களும் எம்.பிக்களும் நேற்றுமுன்தினம் ஏகோபித்த முறையில் குரல் எழுப்பினார்கள்.

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சங்கீத கவிரத்தின, வேகமாகப் பரவி வரும் தொட்டாற்சுருங்கியின் அபாயம் பற்றி எச்சரித்தார்.

தொட்டாற்சுருங்கிச் செடிகள் சிறுபிள்ளைகளின் உடல் நலத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அத்துடன் மத்திய மாகாணத்தில் விவசாய நிலங்களைப் பேரழிவுக்குள்ளாகிவிட்டன. இச்செடிகளை அழிப்பதற்கான இரசாயன மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை - என்றார் அவர்.

சூழல் பாதுகாப்பு அமைச்சர் ருக்மன் சேனநாயக்கா தொட்டாற்சுருங்கிச் செடிகளை ஒழிப்பதற்கான வழிவகைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கோரிக்கைவிடுத்தார்.

பொ.ஐ.முவைச் சேர்ந்த திஸ்ஸ அரலியத்த, ஐ.தே.க.உறுப்பினர் சித்திரமன் திலக, காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகியோர் தொட்டாற்சுருங்கியைத் தத்தமது உரைகளில் பிய்த்து எடுத்தார்கள். அச்செடியை முற்றாக அழித்தொழித்து விட வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் தொட்டாற்சுருங்கி அழிப்புத் திட்டமும் சேர்க்கப்படவேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகக் குரல் எழுப்பினர்.

### பனம்பழம் பற்றி அஸ்வர்

அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் பேசுகையில்,

"நாட்டில் நல்ல பழவர்க்கங்கள் அருகிவருகின்றன. ரம்புட்டான், நுவரெலியா பியர்ஸ், யாழ்ப்பாணப் பனம்பழம் போன்ற பழ வகைகள் அருகிவிட்டன. பழவர்க்கங்களைப் பாதுகாத்து வரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

உறுப்பினர்களின் உரைகளுக்குச் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் ருக்மன் சேனநாயக்கா பதிலளித்துப் பேசினார். பழவர்க்கங்களைப் பாதுகாப்பது எனது அமைச்சின்கீழ் இல்லை. தொட்டாற்சுருங்கியை அழிப்பதற்குரிய வழிவகைகள் பற்றி ஆராய்ந்து வருகின்றோம். கடல் மண் அகற்றுதல் போன்ற காரணத்தினாலேயே இச்செடி வேகமாகப் பரவுகின்றது என்று குறிப்பிட்டார்.

இந்தக் கட்டத்தில் சபாநாயகர் சபை நிகழ்ச்சிகளை அடுத்தமாதம் 5ஆம் திகதி காலை 10 மணிக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார். (ம)

## உதயவாக்கு

மரியாதைக்கு விலையில்லை; ஆனால் அது எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிவிடும்.

## நாளை

தை 15
திங்கட்கிழமை
(28-01-2002)
திதி :சதுர்த்தசி
காலை 6.57 வரை.
பூரணை
வைகறை 5.08 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
முற்பகல் 9.10 வரை.
தைப்பூச நன்னாள்
பூரணை விரதம்
சுபநேரம் : 12.36 - 2.06
ராகுகாலம் : 8.06 - 9.36
(பழைய நேரப்படி)


## சிறுவர் பற்றிச் சிந்தியுங்கள்!



பிள்ளைகளைச் சுற்றியுள்ள பெரியோரே!
ஒருகணம் ......... இந்தப் பிஞ்சு
சொல்லத் துடிப்பதற்கு செவிகொடுங்கள்!!

"நான் சிறியவன்தான்! அதற்காக ..... உங்கள் பலத்தைவைத்து என் உரிமைகளைப் பறிப்பது எப்படி நியாயமாகும்? உங்களின் சந்தோசத்திற்காக என் சுகங்களைப் பறித்த சம்பவங்கள் ஒன்றிரண்டல்ல! அப்போதெல்லாம் நான் பட்ட வேதனையை எந்த மொழியிலும் விவரிக்க முடியாது. எனக்கு வேண்டியதெல்லாம் மனதுக்கேற்றபடி மகிழ்ந்திருக்கும் சூழல்தான். சுகத்தினை கனவில் மட்டும் காணும் எனக்கு என் உரிமைகளுடன் கூடிய 'நிஜமான வாழ்க்கை வழங்கப்படமாட்டாதா???"

*பிள்ளைகளின் மனதில் உறங்கும் இது போன்ற வேதனைகள் நாளை அவர்களை நல்லவர்களாக்க வழிசெய்யாது. அவர்களது மகிழ்ச்சியே எதிர்காலத்திற்கு எழுச்சி!!*

- மஞ்சுளா திருக்கேசன்,
ஆசிரிய கலாசாலை, பலாலி.

சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ.) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். ☎021-2261 EXT 274

(C/20481)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

குபோட்டா லான் மாஸ்டர் K.550, K.600, K.700 என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி. (97498)

YAMAHA RS 100 (JAPAN) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.01, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (97570)

11/2 வயது நிரம்பிய டாய்சொன் பெண் நாயும், ஒரு மாதம் நிரம்பிய டாய்சொன் நாய்க்குட்டிகளும் நல்லின சிலிக்கி கோழிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (97587)

மானிப்பாயில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் (2 1/2 பரப்புக் காணி), கிளிநொச்சியில் அரசினர் ஆஸ்பத் திரி முன்பாக (நகர மத்தியில்) சகல வசதிகளுடன் கடையும், காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வெள் ளியம்பலம் இரத்தினசிங்கம், ஆஸ்பத் திரி வீதி, மானிப்பாய். (97582)

HONDA CD-50, BAJAJ 4S CHAMPION மோட்டார் சைக்கிள்கள, இரும்புப் பெட்டி, YASHICA FX3, CANON AE 1 கமராக்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. கேதீஸ்வரா, நெல்லண்டை, பருத் தித்துறை. 070-21 2247. (97590)

MITSHUBISHI COLOUR 20" T.V. விற்பனைக்கு உண்டு. காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு: 66, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (97593)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 30 வயதுடைய யாழ்ப பாணத்தில் அரசினர்திணைக்களத் தில் தொழில்புரியும் புத்திரனுக்கு யாழ்ப்பாணத்தில் 5'4" உயரத்துக் குக் குறைவான அரசினர் திணைக் களத்தில் தொழில்புரியும் பெண்ணைத் தேடுகின்றனர். ஜாதகக் குறிப்புடனும், குடும்ப விவரங்களுடனும் S.சிதம்பர நாதன், பூங்கடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை எனும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (97417)

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, அரசாங்க திணைக் களத்தில் நிரந்தர உத்தியோகஸ்த ரான, சிவந்த நிறமுள்ள, செவ்வாய் தோஷமற்ற, 1970இல் பிறந்தவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக் கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பிவைக்கப்படும். (சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது) விள.இல.1436, மே/பா.உதயன். (97473)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழி கள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ள லாம். 19,முருகேசர் ஒழுங்கை, முத்தி ரைச்சந்தையடி, நல்லூர். (97403)

தரமான புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து 1/2 கிலோவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- 227, பிற வுண் வீதி, (கலட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (97456)

புறொயிலர் இறைச்சிக் கோழி கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.றஞ்சன், பொற்பதி றோட், கலை வாணி வீதி, கொக்குவில் கிழக்கு. 1Kg - 130/=. (97452)

கல்பேட், புறொயிலர் (1kg 130/-) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய் தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. கண்ணா, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (97546)

இறைச்சிக்கோழி (BROILERS), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (97518)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் (1kg-130/=), விறாத்துப் பருவ சேவல் குஞ்சுகள் (100/=) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவ குமார், பருத்தித்துறை வீதி, கட்டப் பிராய். (97585)

## அறைவாடகைக்கு

வெள்ளவத்தையில் தற்காலிக மாக சமையல், தொலைபேசி வசதி யுடன் சேர்ந்த அறை வாடகைக்கு உண்டு. முற்பணம் இல்லை. நாள் ஒன்றுக்கு வாடகை ரூபா 100/- க்கு மேல். வெளிநாடு செல்ல இருப்பவர் களுக்கு உதவிசெய்யப்படும் தொடர்பு: J.P., இல.83, பெனிகுயிக் வீதி, கொழும்பு - 6, T.P: 589987, 587628, 077-474497. (C/20465)

## தவறிவிட்டது

வரணி, இயற்றாலையைச் சேர்ந்த சின்னப்பு கமலாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 841842103V), விசேட அடையாள அட்டை (இல.091031448) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வரணி மகா வித்தியாலயத்தில் அல்லது நெல்லியடியில் இயங்கும் சாவகச்சேரி நகரசபையில் ஒப்ப டைக்கவும். சன்மானம் வழங்கப் படும். (C/20491)

## வகுப்புகள்

தமிழ் - தட்டெழுத்து, சுருக் கெழுத்து, ஆங்கில - தட்டெழுத்து வகுப்புகள் 28.01.2002 திங்கட் கிழமை ஆரம்பம். தொடர்பு:5, அம்மன் வீதி, (வைரவர் கோயில் முன்பாக) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (97522)

மிகக் குறுகிய காலத்தில் RA-DIO திருத்துவது எப்படி என அறிதல். மேலதிக விவரம் அறிய உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: R.G. கிருபாகரன் (படப் பிடிப்பாளர்), கல்லூரி வீதி, வட்டுக் கோட்டை. (97578)

ஆண்டு 6 தொடக்கம் O/L வரை ஆங்கில வகுப்புகள் (இலக்கியம் உட் பட) நடைபெறுகின்றன. A/L 2003, 2004 புதிய பிரிவுகள் 01.02.2002இல் ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: J. அரியரட்ணம், 16, சோமசுந்தரம் அவ னியு, சுண்டிக்குளி. (97592)

## ராகு கேது மாற்றம்

(நான்கு மாத கால சனியின் வக் கிர சஞ்சாரம் முடிந்தது) ஜீவன்-பிரம் மம் ஐக்கிய வேதாந்த ரகசியம் நூல் அறிமுகமும் அடங்கியது. ரூபா 12/=. எங்கும் விற்பனையாகின்றது. நூலாசிரியர்: சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. T.P.021-2753. (எல்லா ராசிப்பலன்களும்) (97591)

## நல்லை ஆதீனத்தில் இன்று

யாழ்ப்பாணம்,ஜன.27

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் புதிய கலாமண்டபத் தில் நடைபெற்றுவரும் "முத்தமிழ்" நிகழ்வின் ஒன்பதாம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் மங்கள இசை, இசைக் கச்சேரி என்பன இடம்பெறும்.

யாழ்.இந்துக்கல்லூரி முன்னாள் பிரதிஅதிபர் க.சிவராமலிங்கம் இன் றைய நிகழ்வுக்குத் தலைமை வகிப் பார். பிரம்மஸ்ரீ து.சுந்தரமூர்த்திக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

எம்.குகன் குழுவினர் மங்கள இசை வழங்குவர். தொடர்ந்து திரு மதி மகேஸ்வரி சுப்பிரமணியம் குழு வினர் மற்றும் ந.வி.மு.நவரத்தினம் குழுவினர் வழங்கும் இசைக்கச்சேரி இடம்பெறும். (ஐ-7)

---

கொக்குவில் லயன்ஸ் கழகமும்
இணுவில் லயன்ஸ் கழகமும்
We Serve
இணைந்து நடத்தும்

### "எங்கள் மண்ணும் எங்கள் வாழ்வும்"

### விவசாயம், விலங்கு வேளாண்மை சம்பந்தமான கருத்தரங்கு

*காலம்* : இன்று (27-01-2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 *(S.L.T)*
*இடம* : யா/இணுவில் மத்திய கல்லூரி மண்டபம் *(ஆரம்ப பிரிவு)*
*பிரதம விருந்தினர்*: Lion.R.நடராசா *(பிராந்தியத் தலைவர்)*
*கௌரவ விருந்தினர்*: V.இளங்குமரன் *(பெரும்பாக உத்தியோகத்தர் கம. கே. நி. உடுவில்)*

**நிகழ்வுகள்**

*கருத்துரை*: யா/விவசாயபீட பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் வங்கி முகாமையாளர்கள் மற்றும் நிபுணர்கள்

**கீழ்க்காணும் விடயங்கள் சம்பந்தமான**

- விலங்கு வேளாண்மை பற்றிய அடிப்படைக் கருத்துரைகள்.
- பயிரினங்களின் நவீன உத்திகள்.
- இரசாயன பிரயோகத்தில் துர்விளைவுகள்.
- நிதி நிலைமை பற்றிய அடிப்படைக் கருத்துக்களும் மற்றும் கடன் வசதிகளும்
- தென்னைப் பயிர்ச்செய்கையும் பீடைத் தாக்கமும் வீடியோப் படக்காட்சி.

பற்றிய அரிய கருத்துக்களைப் படைக்க வருகிறார்கள். இவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்து விவசாயிகள் சார்பாக கேள்விகளைக் கேட்டு அதன் விளக்கங்களை தெளிவுபடுத்துவோர்.

1.சின்னத்துரை திருகுமார் *(விவசாய சம்மேளனத் தலைவர்)*
2.Lion.செ.இலகுநாதன் *(கமநல கேந்திரநிலையத் தலைவர்)*
3.Dr.Miss..செல்வவினித்தா *(கால்நடை அலுவலகம், கோப்பாய்)*

*நன்றியுரை*: Lion.அமுதலிங்கம் *(இணுவில் அரிமாக்கழகம்)*

கால்நடை வளர்ப்போர், விவசாயம் செய்வோர் மற்றும் அனைவரையும் அன்போடு அழைக்கின்றனர்
கொக்குவில், இணுவில் அரிமாக்கழகத்தினர்.

(001)

**செயற்றிட்ட இயக்குநர்கள்:**
Lion.செ.சிவலிங்கம் *கொக்குவில், அரிமாக்கழகத் தலைவர்.*
Lion.T.செ.கைலாயநாதன *இணுவில், அரிமாக்கழகத் தலைவர்.*

---

### ஜோ எக்கட்டனின் ஜெசித்தாராவின்

இன்றைய ஸ்பெஷல்

**கோழி புரியாணி சிக்கன் பாலாண்டியுடன்**

ரூபா 150/= மட்டுமே.

*முன்வருவோருக்கு முதலிடம்.*

சுவையின் நாயகி

### ஜோ எக்கட்டனின் ஜெசித்தாரா

உங்கள் விருந்தகம்.

19/3, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(97527)

---

உ
சிவமயம்

### ஆச்சார்ஜ அபிஷேக விஞ்ஞாபனம்

**(குருப்பட்டாபிஷேகம்)**

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் உத்தராயண காலம் தைத்திங்கள் 14ஆம் நாள் இன்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 7.15 மணிவரையுள்ள திருவாதிரை நக்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய மகர லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது அந்தண வாரிசுகளான
பிரம்மஸ்ரீ கதிர்காமக்குருக்கள் நாகேஸ்வரசர்மா அவர்களுக்கும்
பிரம்மஸ்ரீ பாஸ்கரஐயர் கிருஷ்ணபவானந்தசர்மா அவர்களுக்கும்
பிரம்மஸ்ரீ நாகேந்திரகுருக்கள் கணேச ஐயர் (இரத்தினஐயர்) தம்பதிகள்
ஆசியுடன்
தீட்சாகுரு **பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்**
*(சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத் தலைவர், வல்வை சிவன் தேவஸ்தானம், குருபீடம்)*
அவர்களால்

கரணவாய் சிவன்கோயிலில் அத்தருணம் கிரியை நடத்தி வைக்க எல்லாம்வல்ல பார்வதி சமேத சிவன் அருள் கூடியுள்ளது என்பதை அன்புள்ளங்களுக்கு அறிவிக்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(C/20498)

---

### சங்கீத வகுப்பு ஆரம்பம்

புதிய சங்கீத வகுப்பு நாளை (28.01.2002) திங்கட்கிழமை தைப்பூச நன்னாளில் ஆரம்பமாகின்றது. முற்கூட்டியே தொடர்புகொள்ளவும்.
பூப்புப்புனித நீராட்டுவிழா, திருமணவிழா முதலியனவற்றில் பெண் அலங்காரப் பொருள்களுடன் பெண்ணை அலங்கரித்தும் கொள்ளலாம்.

*தொடர்பு:* **திருமதி S.ஜெயகாந்தன்**
*திருநெல்வேலி வடக்கு.*

(97595)

---

உ
சிவமயம்

### அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை

23.01.2002 புதன்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் விவரம்

*போசகர்கள்* - சிவஸ்ரீ அ.நடராஜாக்குருக்கள்
சிவஸ்ரீ ச.வேதாரணியக்குருக்கள்
சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர்

*நிர்வாக சபை உறுப்பினர்கள்*

| | | |
|---|---|---|
| தலைவர் | - | சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள் |
| உபதலைவர் | - | சிவஸ்ரீ சு.சுந்தரராஜாக்குருக்கள் |
| செயலாளர் | - | சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக்குருக்கள் |
| உபசெயலாளர் | - | சிவஸ்ரீ சி.மகேந்திரநாதக்குருக்கள் |
| பொருளாளர் | - | சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் |

*உறுப்பினர்கள்*

| | |
|---|---|
| து. விவேகானந்தக்குருக்கள் | ந. கேதீஸ்வரக்குருக்கள் |
| தி. ஜெயராஜ்ஐயா | தி. விக்னேஸ்வரக்குருக்கள் |

| | |
|---|---|
| *பயிற்சிக் கல்லூரி செயற்குழு* | *கட்டட நிர்மாண செயற்குழு* |
| *தலைவர்* - சி. கிருபாகரக்குருக்கள் | *தலைவர்*-சி. கிருபாகரக்குருக்கள் |
| ச. வைத்தியநாதன்ஐயா | ச. மகேஸ்வரக்குருக்கள் |
| பா. மனோகரன்ஐயா | வே. தியானந்தராசாக்குருக்கள் |
| மு. சசிதரன்ஐயா | இ. சர்வேஸ்வரன்ஐயா |
| சி. சிவானந்தன்ஐயா | சி. கமல்ராஜ்ஐயா |

*நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.* (97596)

*செயலாளர்,*
சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக்குருக்கள்.

---

உ
ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!
வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் துணை

### மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் தைத்திங்கள் 15ஆம் நாள் நாளை (28.01.2002) திங்கட்கிழமை முற்பகல் 9.37 மணிமுதல் 10.24 மணிவரையில் வரும் தைப்பூச சுபநன்னாளில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

### ஜுவல்லரி கிருஸ்

என்னும் ஸ்தாபனத்தைத் திறந்து வைக்கவிருப்பதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் குடும்பசகிதமாக வருகை தந்து விழாவைச் சிறப்பித்து மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு.இ.லக்ஷ்மிகாந்தன் (கிளி)**
*பிரதான வீதி, மானிப்பாய்.*

தங்கள் நல்வரவை விரும்பும்:
**திரு.சி.கமலேஸ்வரன்.**

இந்நிறுவனம் முந்திய இடத்திலிருந்து இலங்கை வங்கிக்கு முன்பாக இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(97586)

# காலத்தின் தேவை

**போர்** உடனடியாக நிறுத்தப்படவேண்டும் -

தமிழீழ விடுதலைப் புலிகள்மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு - மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன், அரசு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் -

இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு விரைவிலே காணப்பட வேண்டும் -

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களிற் போட்டியிட்ட கட்சிகளுட் பெரும்பாலானவை -

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு -
தமிழீழ விடுதலைக் கழகம் -
தமிழ் இடதுசாரி அமைப்புக்கள் -
சில சுயேட்சைக் குழுக்கள் -
முஸ்லிம் காங்கிரஸின் தமிழ் வேட்பாளர்கள் -

ஆகியோர் தம் தேர்தல் பிரசாரங்களில் இவற்றையே வலியுறுத்தினார்கள்.

தேர்தலில் தாம் வெற்றிபெற்றால் இவற்றுக்காக அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் என வாக்குறுதியும் அளித்தார்கள்-

எனினும் -

தமிழ் மக்கள், தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பையே ஆதரித்து, அந்த அமைப்பைச் சேர்ந்த 15 பேரைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்தார்கள் -

ஒரே மாதிரியான கொள்கைகளையும் கோரிக்கைகளையுமே மேற்போந்த கட்சிகள் அனைத்தும் - அட்சரம் பிசகாமல் வலியுறுத்திய போதிலும் -

தமிழ் வாக்காளர்கள் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு மட்டுமே தமது அமோக ஆதரவை அளித்து - 1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீண்டும் ஒரு சாதனையை நிகழ்த்தினார்கள் என்றால், அதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் யாவை?

தமிழ் மக்கள் என்றென்றும் விரும்பி - எதிர்பார்த்து - வலியுறுத்தி வந்துள்ள "ஒற்றுமை"யின் சின்னமாக - நான்கு தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கியதாக அது உருவாகியமை ஒரு காரணம்.

இது தேர்தலிலே வெற்றி பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டமைப்பு அன்று - தேர்தலின் பின்னரும் - தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகள், இலட்சியங்கள் பூரணமாக வென்றெடுக்கப்படும்வரை இந்தக் கூட்டமைப்பு தொடர்ந்து ஆக்கபூர்வமாகச் செயற்படும் என அதன் வேட்பாளர்கள் மேடைக்கு மேடை தெளிவாகவும், உறுதியாகவும் கூறி வந்தது ஒரு காரணம் -

இப்போது இந்தக் கூட்டமைப்பில் இடம்பெறாத தமிழ்க கட்சிகளை - மிக விரைவில் கொள்கை அடிப்படையில் எம்முடன் இணைத்துக்கொண்டு - தமிழ் மக்களின் ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவோம் என அவர்கள் சொல்லிவந்தது ஒரு காரணம்.

இத்தகைய உண்மைக் காரணங்களை - தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல் வாதிகளும், ஆதரவாளர்களும் குறிப்பாக அந்த அமைப்பின் சார்பிலே நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களும் - நின்று - நிதானித்து - ஆளமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் -

கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் தனித்தனியாக கூடித் தீர்மானங்களை எடுத்து, அறிக்கைகளை வெளியிட்டுவருவதும் -

வெளியே நிற்கும் கட்சிகளை உறுதியான கொள்கைகளின் அடிப்படையிலே கூட்டமைப்பு சேர்த்துக்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையுமே எடுக்காமல் இருந்து வருவதும் -

நிறுவன ரீதியான - பலமான - கட்டுக்கோப்பான ஓர் அமைப்பாக இக் கூட்டமைப்பைக் கட்டிஎழுப்புவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்து வருவதும் -

தமிழ்த் தலைமை மீண்டும் சிதைத்து சின்னாபின்னப்பட்டுத் திற்குக்கொன்றாய்த் திரியத் தொடங்கிவிடுமோ என்ற பலத்த சந்தேகத்தை தமிழ் மக்கள் மனதிலேயே சிறிது சிறிதாக உருவாக்கத் தொடங்கியுள்ள இவ்வேளையில் -

உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் பலவீனப்பட்டபடியாலேதான் விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுவார்த்தைக்கு சம்மதித்துள்ளார்கள் என முன்னைய வெளிநாட்டு அமைச்சரும் -

விடுதலைப் புலிகளை நம்பவே கூடாது. அவர்கள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு அவசரப்படக்கூடாது - அவர்களுடன் இப்போதைய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி எந்த விதமான தீர்வை எட்டினாலும், நாட்டின் தலைவி என்ற முறையில் நானே இறுதி முடிவை எடுப்பேன் என்ற சாரப்பட ஜனாதிபதியும் -

தம் பேட்டிகளிலும் பத்திரிகை அறிக்கைகளிலும் ஒருவித 'முரணான' போக்கை வெளிப்படுத்தி வரும் இவ்வேளையில் -

ஆழ்ந்த சிந்தனையையும் அர்த்தபூர்வமான நடவடிக்கைகளும் அத்தியாவசியமானவை மட்டுமல்ல, அவசரமானவையும்கூட -

வடக்கு - கிழக்கு மாகாணங்களாக எங்களின் பாரம் பரிய தாயகத்தில் -

எங்களை நாங்களே ஆண்டு கொண்டு -

எங்கள் மொழி - சமய - கலை - கலாசார பாரம்பரியங்களைக் காத்துக் கொண்டு -

மேன்மேலும் வளர்த்துக்கொண்டு -

தொடர்ந்தும் இந்த நாட்டிலே தமிழர்களாக 'வாழ்வதும் - பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் சமத்துவமாகவும் சமாதானமாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்து இந்த நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைப்பதுமே -

தமிழ் மக்களின் அபிலாஷைகள் - இலட்சியங்கள் என்பது -

ஒரே குரலில் -
பலம் மிக்கதாக -
பயன் மிக்கதாக -
ஒலிக்க வேண்டுமானால் -

தமிழ் மக்களின் இந்த அபிலாஷைகளை வென்றெடுக்கப் போராடி, அதன் விளைவாக உருவாக்கப்பட்ட சூழ்நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வந்துள்ள விடுதலைப் புலிகளின் -

நிதானமான -
நீதியான -
நேர்மையான -
முயற்சிகளுக்கு வலிவும் பொலிவும் கூட்ட வேண்டுமானால் -

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு என்ற மொட்டிலிருந்து - தமிழ் மக்களின் கூட்டமைப்பு என்ற மலர் விரிந்து மணம் பரப்ப வேண்டும் -

காலத்தின் தேவை இது.

கருத்தில் எடுப்பார்களா கதிரையில் இருப்பவர்கள்.

- தமிழ்மகன்.

# புலிகள் மீதான தடைநீக்கம்: ஜனாதிபதி வெளியிடும் அச்சம்!

கொழும்பு,ஜன.27

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட பின்னர் அந்த அமைப்பு பயங்கரவாத நவடிக்கைகளைக் கைவிட்டுவிடுமா என்பது குறித்து மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும்.

- இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் இந்தக்கருத்தை அவரது ஊடகச் செயலாளர் ஜினதாஸ பீரிஸ் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில் ஜனாதிபதி மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவார்.

நாட்டின் தலைவி என்ற வகையில் நாட்டில் சமாதானம் உருவாகுவதற்கு அவர் தடையாக இருக்கமாட்டார்.

சமாதான முயற்சியைச் சரியான பாதையில் கொண்டுசெல்ல ஜனாதிபதி தன்னை அர்ப்பணித்துச் செயற்படுவார்.

- என்று ஜனாதிபதியின் செயலர் தெரிவித்தார். (ஐ-3-ரி)

# பருத்தித்துறை துறைமுகத்திற்கு புதிய இழுவைப் படகுகள் வரும்

யாழ்ப்பாணம்,ஜன.27

பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் கப்பல்களில் இருந்து பொருளகளைத் துரிதமாக இறக்க கூடுதல் வசதிகள் செய்யப்படவிருக்கின்றன.

இதற்காக நான்கு இழுவைப் படகுகள் (பாஜ்கள்) மற்றும் ஓர் இழுவைக் கப்பல் ஆகியன புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சினால் வழங்கப்படவிருக்கின்றன.

திருகோணமலையில் உள்ள கனிப்பொருள் கூட்டுத்தாபனத்தில் இருந்து இவை பருத்தித்துறை துறை முகத்துக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சில் நடந்த கூட்டம் ஒன்றில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு இந்த வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன.

பருத்தித்துறையில் நான்கு இழுவைப் படகுகளே தற்போது உள்ளன. இதனால் பொருள் இறக்கும் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் -

இதன் காரணமாக கப்பல்கள் பல தினங்கள் தரித்து நிற்கவேண்டியுள்ளது என்றும் -

தெரிவிக்கப்பட்டுவந்தது. (ஐ-3)

## யாழ். விஞ்ஞான சங்கத்தின்

# கண்காட்சியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய பாடசாலைகள்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். விஞ்ஞானச் சங்கத்தினால் கடந்த புதன்கிழமை முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சியில் சிறந்த படைப்புக்களை பார்வைக்கு வைத்த பாடசாலைகள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளன.

இதன்படி சிறந்த படைப்புக்களை பார்வைக்கு வைத்த முதல் மூன்று பாடசாலைகளுக்கு பணப் பரிசில்களும், அடுத்து ஏழு இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளும் முறையே முதல் மூன்று இடங்களை வென்று பணப்பரிசில்களைப் பெறவுள்ளன.

அடுத்து ஏழு இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரம் முறையே வருமாறு:-

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ். வேம்படிமகளிர் கல்லூரி, யாழ்.சென். ஜோண்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாண் கல்லூரி, யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி.

சான்றிதழ்கள் பெறும் கல்லூரிகள் உருவாக்கிய பல்வேறு வகையான படைப்புக்களின் அடிப்படையிலேயே பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-7-ரி)

## அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

யாழ்.கல்வி வலயத்தில் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையின் நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத் திட்டங்களுக்குரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-10)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை

## நீதி அமைச்சர் லொக்கு பண்டார கூறுகிறார்

கொழும்பு,ஜன.27

நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் எண்ணம் எதுவும் அரசாங்கத்துக்குக் கிடையாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நீதி, சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருங்கிணைப்பு, புத்தசாசன அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்களின் கோரிக்கையை ஏற்று, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் நோக்கம் எதுவும் அரசுக்குக் கிடையாது என்று அவர் கூறினார்.

இந்தத் தடைச்சட்டம் நீக்கப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சியைக் கொண்டுநடத்தமுடியாத நிலை தோன்றும் 'எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ-4)

# ஜி.சீ.ஈ.மாணவருக்கான முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.சைவ பரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்காக நடத்தப்படும இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சை அடுத்த மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக தத்தமது பாடசாலைகள் மூலமாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என்று சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

பரீட்சை வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது. (ஐ-7)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.27

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

☆ காலை 9மணி கே.ஸி.ஸி.ஸி. வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க.

☆ பிற்பகல் 1.30 மணி - பற்றீஸியன் வி.க. எதிர் யாழ்.பல்கலைக் கழக வி.க.

(ஐ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.உதைபந்தாட்ட லீக்கால் நடத்தப்படும் நொக்கவுட் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குழுநிலை ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளையும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

☆ ஞாயிறு பிற்பகல் 4.30 மணி - சென்.நீக்லஸ் எதிர் யாழ்.பல்கலைக் கழகம்.

☆ திங்கள் பிற்பகல் 4.30 மணி - சென்.அன்ரனீஸ் எதிர் பொற்பதி.

(ஐ-3)


உ

கைதடி வணிகர் கழகம்

**பொதுக் கூட்டம்**

கைதடி வணிகர் கழகப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா தொலைத்தொடர்பு நிலையத்தில் உபதலைவர் திரு.செ.தனபாலசிங்கம அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிதாகச் சேர விரும்புகின்ற அங்கத்தவர்கள் உட்பட சகலரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

(97380) திரு.க.பரமேஸ்வரன் (செயலாளர்)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 04 - 1933



மறைவு 27 - 01 - 2000

அமரர்

**சின்னக்குட்டி குண்டுமணி**

திதி 03-02-2002

அன்புடனும் பண்புடனும்
அறிவுரைகள் பல கூறியும்
அவனியிலே எமை வளர்த்து
அவனடி சேர்ந்த எம் தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு ஆன போதும்
ஆறவில்லை எம் இதயம்
தங்கள் ஆத்மா சாந்தியடைய
தலை சாய்க்கின்றோம் இறையடியில்!

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

- குடும்பத்தினர்.


(97556)

# வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத

## (வண்ணை வைத்தீ

# புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்

### தை மாதம் 14ஆம் நாள் இன்று (



புதிய 70 அடி உயரமான பஞ்சதள இராஜகோபுரத்தின் கம்பீரத் தோற்றம்.

## ஜெகத் குருவின் ஆசிச்செய்தி

ஸநாதன தர்மமாகிய இந்துமதம் உலகம் தோன்றிய காலம் முதலே மக்களிடம் தர்மத்தை எடுத்துச் சொல்லி மக்களை நல்வழிப்படுத்துவதில் தம் பங்கைச் செவ்வனே செய்துவருகிறது. தர்மங்களைச் செய்வதில் பெரும்பங்கு வேதம் ஓதுவதாலும், ஓதுவிக்கலாலும் ஆகிறது. இதையே ஔவைப் பிராட்டியும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று கூறியிருக்கிறார். மக்கள் பக்தி செய்வதற்கு ஆலயங்களுக்குச் சென்று ஆலய மூர்த்தங்களை வழிபாடு செய்வது என்பது நம் முன்னோர்கள் வகுத்த வழி. அவ்வழியில் சென்று வழிபாடு செய்வதற்கு யாழ்ப்பாணம் வாழ் தமிழன்பர் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கட்டி, விநாயகர், அம்பாள், சிவன், பரிவார தேவதைகள் ஆகிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து, இன்று (27.01.2002) ஞாயிறு கும்பாபிஷேகம் நடத்துவதை அறிந்து சந்தோஷிக்கின்றோம். மக்கள் நம் முன்னோர்கள் சொற்படி ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகள் செய்து, பகவான் நாமங்களைச் சொல்லி, கலியில் கடைத்தேற இம்மாதிரி தொண்டுகள் செய்யும் அன்பர்கள், பணியில் ஈடுபடவேண்டும் என்று சொல்லி ஆசீர்வதிக்கின்றோம்.

- *நாராயண ஸ்ம்ருதி* **ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்,**
ஸ்ரீமடம் சமஸ்தானம், காஞ்சிபுரம்.

## வண்ணையம்பதியில் அறுபத்துமூவர் பிரதிஷ்டை

உலகெலாம் உணர்ந்தோதுதற் கரியவனாகிய எம்பெருமான் யாழ்ப்பாணம் வண்ணையம்பதியில் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீசுவரனாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றான். எம்பெருமானின் சந்நிதியில் தைமாதப் புண்ணிய தினத்தில் (27.01.2002) அவனது அருட்பிரவாகம் சிறந்து விளங்கும் வகையில் நிகழும் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிகேத்தைக் காணும்பேறு நாம் செய்த தவப்பயனால் எம் அனைவருக்கும் கிட்டியுள்ளது. இவ்வாலயத்தில் வானுயர நின்று விளங்கும் பஞ்சதள ராஜகோபுரத்திற்கும் சைவத்தொண்டர்களாகிய அறுபத்து மூவருக்கும் நூதனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற எம்பெருமான் திருவருள் கிட்டியுள்ளது. திருத்தொண்டர்கள் தொண்டு என்பதையே குறிக்கோளாகக்கொண்டு அன்பே வடிவான சிவபெருமானை உள்ளத்தில் எழுந்தருளச் செய்துகொண்டமையினால் அவர்தம் செயல்கள் அனைத்தும் அறச்செயல்களாகவே அமைந்தன. இத்தகைய தொண்டர்தம் பெருமை அளவிடற்கரியது. சுந்தரர் தம்மை '*தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்*' என உள்ளன்புடன் வெளிப்படுத்தியவர். இறைவன் திருவருள் எங்கும் நிறைந்து சிவமயமாக விளங்கினாலும் சிவனடியாரிடத்தே சிறப்பாக வெளிப்பட்டு விளங்கும் என்பது எமது பரிபூரணமான நம்பிக்கை. சண்டேசுவர நாயனாரின் வரலாறு சிவபக்தியின் பெருமைக்குச் சிறந்த உதாரணமாகும்.

*'ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த*
*நேசரெதிர் நிற்ப தரிதாமே'*

என்ற பாடல்வரிகள் மூலம் நீதிவெண்பா ஈசனது நேசர் பெருமை பேசுகின்றது. இத்தகைய திருத்தொண்டர்களது திருவுருவங்களை குருலிங்க சங்கமம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சிவாலயங்களில் தாபித்து பிரதிஷ்டை செய்யும் மரபு இருந்துவருகின்றது. அம்மரபு வண்ணையம்பதியில் இம்மகா கும்பாபிஷேகத்தின்போது நிறைவேறுவது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. பல வருடங்களுக்கு முன்பே தமிழகத்திலிருந்து தருவிக்கப்பட்ட அறுபத்து மூவரது சிலாவிக்கிரகங்கள் நீண்டகாலமாகத் தாபிக்கப்படாமல் இருந்தன. இச்சிவாலயத்தில் எம் பெருமானது திருவருளை முன்வைத்து தர்மகர்த்தாவாகிய சைவத்திரு.வை.கந்தப்பச்செட்டியார் அவர்கள் மேற்கொண்டுள்ள திருப்பணியின் ஓரம்சமாக திருத்தொண்டர்களது திருவுருவப் பிரதிஷ்டையும் நிகழ்கின்றது. இப்பணி போற்றுதற்குரியதாகும். சிவாகம மரபில் நிர்மாணிக்கப்பட்டு, நித்திய நைமித்தியங்கள் நிறைவேறிவரும் இவ்வாலயத்தில் அறுபத்து மூவரின் பிரதிஷ்டை நிகழ்வது எம் சமய மரபுக்குப் பெருமை தருவதோடன்றி, தொண்டர் தம் பெருமையை மக்கள் உணர்ந்து அந்நெறி நிற்கவும் உதவும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் மகாகும்பாபிஷேகம் நிகழும் இப்புண்ணிய நாளில் எம்பெருமானின் திருவருள் பொலிவதாக! எங்கும் அன்பும் அமைதியும் சுபிட்சமும் நிலவ அவனருளை இறைஞ்சுவோமாக!

**பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்,**
கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஆலயத்தின் தொன

இலங்கையின் வடபாகத்திலுள்ள யாழ்ப்பாண நகரம் சைவசமயத்திற்கு உறைவிடமாய் இருந்தது என்பது வரலாற்றுச் சான்றுகளால் அறியக்கூடியதாக இருக்கிறது. போர்த்துக்கேய அரசினரும், ஒல்லாந்து அரசினரும் தங்கள் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் புராதன சைவ ஆலயங்களை இடித்தும், சமய வழிபாடுகளைத் தடைசெய்தும், தங்கள் சமயத்தைப் பரப்பிவந்த காலத்தில் இற்றைக்கு 212 வருடங்களுக்கு முன்பு (கி.பி.1790) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த வைத்திலிங்கச் செட்டியார் அவர்களால் கட்டப்பட்ட பெருமை வாய்ந்தது வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் ஆகும். இது வண்ணார்பண்ணை சிவன் கோயில், செட்டியார் சிவன் கோயில் எனப் பலவாறாகப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள இன்றைய சிவாலயங்களுள் இக்கோயிலே மிகவும் பழைமை வாய்ந்ததாகும். அழிக்கப்பட்ட சைவத்திற்கும் ஒடுக்கப்பட்ட தமிழுக்கும் புத்துயிரைக் கொடுத்த வண்ணை வைத்தீஸ்வரனின் கோயில் ஆகமவிதி முறையில் அமைந்து, சிறந்த முறையில் ஆகமவழிப் பூசைகளமையப்பெற்று, ஆகம வல்லுநர்களாகிய சிறந்த சிவாச்சாரியார்களால் பூசிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயமானது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற கீர்த்தி வாய்ந்ததாகும். இத்தலத்தின் தீர்த்தம் வண்ணை மேற்கில் அமைந்துள்ள வில்லூன்றி புனித தீர்தம் என்னும் சாகரசங்கம் தீர்த்தமாகும்.

முத்து வியாபாரத்தினாலும் யானை வியாபாரத் தரகருமான பெரும் தனவந்தரான வைத்திலிங்கச் செட்டியார் இப்பெருமை வாய்ந்த கோயிலையும் பரிவாரக் கோயில்களையும் கட்டுவித்தார். பல நிலங்களையும் கொள்வனவு செய்திருந்தார். ஒல்லாந்தர் காலத்தில் தமது மதத்தைப் பரப்பும் நோக்குடன் இருந்த தேசாதிபதிகளின் நன்மதிப்பும் அபிமானமும் பெற்ற செட்டியார் அவர்கள், இக்கோயிலைக்கட்டுவதற்கு ஒல்லாந்தர்களை உடன்படச் செய்தமை அவரிடமுள்ள ஆற்றலைப் புலப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி, 1776ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பட்டினத்தின் யானை வியாபாரத் தரகராக ஒல்லாந்த தேசாதிபதிகளால் நியமிக்கப்பட்டமையும் அவருடைய வியாபாரத்திறமைக்கு மகுடம் வைத்தாற் போலுள்ளது. ஒல்லாந்த அரசால் வழங்கப்பட்ட இதற்கான ஆவணங்கள் டச்சுமொழியில் இன்றும் பேணப்பட்டுவருகிறது.

சோழநாட்டிலிருந்து வந்து குடியேறிய ஸ்ரீமான் கோபாலச் செட்டியாரின் மகனாகிய வைத்திலிங்கச் செட்டியார், ஒல்லாந்த அரசின் ராஜ பிரதிநிதியாக இருந்த பால்க் என்பவரின் ராஜ வாசல் முதலியாராகவும் துவிபாஷகராகவும் (மொழி பெயர்ப்பாளர்) இருந்த கனோசையரிடம் உத்தியோகம் பார்த்து வந்தபின் அவரிடம் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாகத் தனியே சென்று வியாபாரத்தில் ஈடுபட்டார். இத்தருணத்தில் செட்டியார் அவர்களுக்கும் ஒல்லாந்த தேசாதிபதியவர்களுக்கும் வியாபாரத்தில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. தேசாதிபதியின் மனைவி செட்டியாருடைய நேர்மை, விசுவாசம், நற்குணம், நல்லொழுக்கம் முதலியவைகளைக்கண்டு அவரிடத்தில் பேரபிமானம் வைத்தார்.

இப்படி இருக்கையில், கூழங்கைத் தம்பிரான் என்னும் ஒரு பெரியார் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குவந்து கோபாலச் செட்டியாருக்கு நட்புடையவராக இருந்தார். அந்தநேரம் இவருக்குப் பிறந்த புத்திரனை ஆசீர்வதித்து வைத்திலிங்கன் எனப் பெயரிட்டு அழைக்குமாறு கூறியதுடன், பின்னர் இவன் பெருங்கருமங்கள் செய்வான் எனக்கூறிச் சென்றார். இச்சிறுவன் வளர்ந்து பெரியவனான சமயம் ஒல்லாந்த தேசாதிபதியவர்களின் மனைவியின் பேரபிமானம் பெற்றவனாக அவர்களுடன் வளர்ந்து வரலானான். அக்காலத்தில் முத்துக் குறிப்புக் குத்தகையை தேசாதிபதி அவர்கள் வைத்திலிங்கச் செட்டியார் அவர்களிடம் கையளித்து, அவரையே ஏற்று நடத்துமாறு வேண்டிக்கொண்டார். அதற்கிணங்க அதனை ஏற்று கிரமமாக நடத்தி பேரிலாபமடைந்தார். தனது குணத்தாலும், கொடையாலும் நல்லொழுக்கத்தினாலும் ஈசுவர பக்தியாலும் சிறந்து பெரும் புகழ்படைத்தார்.

## செட்டிமார்களின் காலதரிசன வெளிப்பாடு

யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு உருவாக்கத்திலும், அதன் அடையாளம் பற்றிய பிரக்ஞையிலும் செட்டிமார்களின் வகிபங்கு என்பது சுவாரசியமானதொன்று. தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும், ஆசியாவிலும் அவர்களுக்கிருந்த பொருளாதார செல்வாக்குகளாலும், தொடர்புகளாலும் கடல்வழிப்பயண அனுபவங்களினாலும் அவர்கள் பரிச்சயப்பட்டிருந்த பல்வகைப் பண்பாட்டுக் கூறுகளும் அவர்களுடன் யாழ்ப்பாணத்திற்குள் கொண்டுவரப்பட்டன. செட்டிமார்களின் இவ்வனுபவங்களின் செழுமையின் தேட்டமாக தமிழகத்தில் செட்டிநாட்டைக் கருதினால் அதன் நீட்சியை நாம் யாழ்ப்பாணத்தில் இனங்காணலாம். இந்தச் சமூக கலாசார ஊடாட்டங்களின் சிகர வெளிப்பாடுதான் 1790இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின் உருவாக்கம் என்பதும், ஒல்லாந்தரின் காலனித்துவ நாட்டில் இதன் உருவாக்கம் மதரீதியாக மட்டுமல்லாமல் அரசியல், கலாசார ரீதியாகவும் முக்கியத்துவமுடையது.

இவ்வாலயத்தின் கட்டமைப்பு என்பது கடைத்தெருவாக அமைந்த மூன்று பிரகார அமைப்பும், பெரிய மதிற்சுவர்களால் எல்லைப்படுத்தப்பட்ட இரண்டாம் பிரகாரமும், முதலாம், இரண்டாம் பிரகாரங்களின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கோபுரவாயில்களும் தமிழகக் கோயில்களின் அனுபவத்தை உரசிச் செல்கின்றன. மற்றைய யாழ்ப்பாணத்து கோயில்களின் பொதுவியல்பான மணிமண்டபம் என்கிற அமைப்பு இங்கு இல்லை என்பதுடன், காஞ்சிபுரத்தில் உள்ளதைப் போன்று வெளிப்பிரகாரத்து வாயில் அமையவேண்டிய இடத்தில் சுயாதீனமான ஒரு மண்டபம் அமைந்துள்ளது. இதில் உள்ள தூண்களின் அமைப்பும், வளைவுகளின் அமைப்பும் நாயக்கர் கால காலனித்துவ கட்டட கூறுகளின் இணைப்பை எடுத்துக்காட்டுகின்றன.

இக்கோயிலின் இரண்டாம் பிரகாரமானது நான்கு வாயில்களைக் கொண்டது. கிழக்கு புறவாயிலில் தற்போது பஞ்சதளக் கோபுரம் அமைந்துள்ளது. வடக்கு வாயில் தீர்த்தக்கேணியில் திறக்கின்றது. கேணியில் உள்ள கூரையிடப்பட்ட மண்டபத்தில் இன்று எஞ்சியுள்ள கிளி அலங்கார வேலைப்பாடுள்ள போதிகையுள்ள தூண்களின் கைவினை நுட்பம் கவனத்திற்குரியது. இதேபிரகாரத்தின் தெற்குப் பகுதியில் உள்ள வாகனசாலையில் யாழ்ப்பாணத்தின் பெரிய, பழைய மரவாகனங்கள் இக்கோயிலின் தொன்மைச் சிறப்பை இன்றும் எடுத்தியம்புகின்றன. முதல் பிரகாரத்தின் மேற்குப்புறச் சுவரை அண்டி அமைக்கப்பட்டுள்ள பரிவாரத் தெய்வங்களுக்கான படிம அறைகளின் பரவளைவு முகப்புக்கள் ரோமர்களின வழிவந்த மேற்கத்தேய பாரோக்கோவின் (Baroque) செல்வாக்கிற்குட்பட்டவை. மையப் பகுதியில் வழமையான கொடித்தம்பம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை, அம்மன் சந்நிதி என்பன காணப்படுகின்றன. கருவறையின் விமானத்தில் மிகப்பழைய சுதை வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. கருவறைச் சுற்றுச்சுவர் கல்லாலானது. இதன் கட்டமைப்பு, அலங்கார வேலைப்பாடுகள் தமிழக சோழ, விஜய நகரக் கட்டடப் பாணிகளை ஞாபகமூட்டுகின்றது. இதைப்போன்றே இங்குள்ள வார்ப்பு விக்கிரகங்களும் தமிழகத்தூடான மோடி ரீதியான தொடர்பைக் கொண்டுள்ளன.

தமிழகத்து கலை வெளிப்பாட்டு முறைகளையும் அவற்றின் பயன்பாட்டையும், யாழ்ப்பாணத்தின் மதம்சார்ந்த வாழ்க்கையிலும், வெளிப்பாட்டு சூழலிலும் பரிச்சயப்படுத்துவதிலும், பரப்புவதிலும் தொடர்ச்சியைப் பேணுவதிலும் செட்டியார்களின் பணி முக்கியமானது.

- தா.சனாதனன்

வைத்திலிங்கச் செட்டியார் கூழங்கைத்தம்பிரானிடம்
குறித்த நிலத்தைவாங்கி, 1787ஆம் ஆண்டு அத்திவாரம்
கட்டிப் பூர்த்தி பண்ணினார். 1790ஆம் ஆண்டு சாதாரண
கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் கூடிய சுபவேளையில், ஸ்ரீ
அம்மையாரையும் பிரதிஷ்டை செய்துவைத்தார்.

இத்தகைய வரலாற்றுப் பெருமையும், சிறப்பும்வாய்ந்த
தோன்றல்கள் அவரின் 1805ஆம் ஆண்டுச் சாசனத்தின்ப
இவர்கள் காலத்திலேயே 1980ஆம் ஆண்டில் நடைபெ
கும்பாபிஷேகத்தின் பின்னர் எத்தனையோ அனர்த்தங்களி
அவற்றையும்மீறி, இன்று 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி, இக்
சீருடனும் வானோங்கி உயர்ந்து யாழ்ப்பாண நகரத்திற்கு
சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெற வைத்தீஸ்வரன்
மக்களுக்கு ஏற்படுத்துகின்றது.

### இராஜகே

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற முன்னோ
அங்கமாக அமைவது அதன் கோபுரமாகும். ஆலயத்திற்கு உ
இது உயர்ந்ததாக இருக்கும். இதனையே இராஜகோபுரம்
இக்கோபுரம் வானளாவி உயர்ந்து, மூலமூர்த்தியின் மகி
மேலே கூறப்பட்ட சிறப்புக்களைத் தன்னகத்தே இன்று கொ
கோயிலில் அமைந்திருப்பது யாழ்ப்பாண மாநகரத்தின் எழி

இக்கோயிலின் இராஜகோபுரமானது 1970ஆம் ஆண்
இதன் நிர்மாண வேலைகள் போர்க்காலச் சூழ்நிலைகளின்
ஆண்டளவில் முற்றுப்பெறும் நிலையில், அவ்வேளையில்
பல பகுதிகளும் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. 1787இ
டத் தொடங்கிய காலத்திலிருந்து சரியாக 200 வருடங்க
நிகழ்ந்தன. அரச படைகளின் வான் தாக்குதல்களால் சே
ஏனைய பகுதிகளையும் திருத்தியமைக்க அரசிடம் நஷ்டஈடு
நிலையில், கோயில் தர்மகர்த்தாவால் மேற்படி ஆலயத்தின் இ
இன்று வண்ணை ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரன்
உருப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பது ம

இங்கு அமைக்கப்பட்டுள்ள இராஜகோபுரம் 70அடி உ
கொண்டு உரிய அளவுப் பரிமாணத்திற்கமைய அமைக்க
உருவங்களும், ஏனையவையும் அவற்றிற்குரிய உடல்
பொதுவாக ஒற்றைப்பட எண்ணிக்கையில் அமைந்திருக்கும்
அமைக்கப்பட்டிருக்கும். இங்கு ஐந்து தளங்களைக் கொ
உடலின் ஐம்பொறிகளைக் குறிப்பவையாக அமைகின்ற
வெவ்வேறு தத்துவங்களுக்கு இக்கோபுர வாயில்கள் சின்

இவற்றோடு மட்டுமல்லாமல், இக்கோபுரத்தின் அழகு அ
கொண்டமைந்திருக்கின்றது. சுடலையில் நடனமாடிய சிவ
திறம், அக்கடவுளின் கோபுரத்திலும் வர்ணமாகத் தீட்டப்
போதாது. இத்தகைய தெய்வீக அழகும் மெருகும் கொண்
அருளால் யாழ்ப்பாணப் பட்டினத்தை மேன்மேலும் அழகு

### வைத்தீஸ்வரனின் பரி

ஈழத்துச் சைவ சமய வரலாற்றில் சிறப்புக்குரிய ஆ
கோயில் தனக்கேயுரிய பல சிறப்பம்சங்களைக் கொண்ட
ஏனைய கோயில்களைப் போலல்லாது தனது பரிவாரக் கோ
கொண்டமைந்திருக்கும் சிறப்புவாய்ந்ததாகும். வண்ணை வ
வேம்படிப்பிள்ளையார் கோயில், வண்ணை மேற்கிலுள்ள இ



1987 மே 27ஆம் திகதி நடத்
னால் பலத்த சேதமடைந்த அ

கோயில், பண்ணை முத்துமாரி அம்மன் கோயில் ...தியன
அமைந்திருக்கின்றன. இக்கோயில்களுள் வேம்படிப்பிள்ளை
எல்லைக்கோயில்களாகவும், காவல் தெய்வங்களாகவும்

வைத்தீஸ்வரன் கோயிலின் ஆரம்பகர்த்தாவான ஸ்ரீ
கோபாலச் செட்டியார், சோழநாட்டிலிருந்து யாழ்ப்பாண
வந்த விநாயகப்பெருமான் குடிகொண்டிருக்கும் இடமே
எல்லோராலும் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்குக் கோயி
சாரும். அதுமட்டுமன்றி, இக்கோயில் அமைந்திருக்கும்
கடையடிப்பிள்ளையார் கோயில் எனவும் அழைப்பர். வைத்
எல்லாம் முதலில் பிள்ளையார் கடவுளான விநாயகருக்கு அபி

வேம்படிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் அமைந்
கோயிலாகும். இங்கு வைத்தீஸ்வரன் கோயிலில் நடை
கிரியைகளைச் செய்யும்போது இக்கோயிலுக்கு வந்து

# ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## த்தீஸ்வரன் கோயில்)

## ம்பாபிஷேக பெருவிழாச் சிறப்பிதழ்

று (27—01—2002) ஞாயிற்றுக்கிழமை

# ன்மைமிகு வரலாறு

ம்பிரானிடம் கொண்ட மதிப்புக் காரணமாக அவர் சொற்படி அத்திவாரமிட்டு மூன்று வருடங்களுக்குள்ளே ஆலயத்தைக் டு சாதாரண வருடம் சித்திரைமாதம் பூர்வ பட்சத்து தசமியோடு ளையில், ஸ்ரீ வைத்திலிங்கப் பெருமானையும் ஸ்ரீ வாலாம்பிகை ர்.

பும்வாய்ந்த இக்கோயிலை வைத்திலிங்கச் செட்டியாரின் வழித் ாசனத்தின்படி தொடர்ந்தும் பராமரித்து நிர்வகித்து வருகின்றனர். ல் நடைபெற்ற புனராவர்த்தன, சம்புரோஷன, நவகுண்டபக்ஷ னர்த்தங்களினால் பல தடவை இக்கோயில் சேதமடைந்தது. யிற்றுக்கிழமை புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் டுமன்றி, இக்கோயிலின் ராஜகோபுரம் இன்று புதுப்பொலிவுடனும், நகரத்திற்கு மத்தியில் நிற்கும் காட்சியானது நலியவைக்கப்பட்ட த்தீஸ்வரன் அருள் கொண்டிருக்கும் உணர்வையே யாழ்ப்பாண

### ராஜகோபுரம்

ற முன்னோர்களின் வாக்கிற்கிணங்க ஓர் ஆலயத்தின் பிரதான லயத்திற்கு உள்ளே இருக்கும் கோபுரங்கள் எல்லாவற்றையும்விட ராஜகோபுரம் அல்லது ஸ்தூலலிங்கம் என்று கூறப்படுகின்றது. தியின் மகிமையை விளக்கும் முறையில் அமைதல் வேண்டும். இன்று கொண்டிருக்கும் இக்கோபுரம் வண்ணை வைத்தீஸ்வரன் கரத்தின் எழிலை இன்னும் அதிகரிப்பதாக அமைகின்றது.

ஆம் ஆண்டளவில் அடித்தளமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. நிலைகளின்போது பல தடவைகள் தடைப்பட்டாலும் 1987ஆம் வேளையில் நடந்த விமானத் தாக்குதலால் அதுவும் கோயிலின் ன. 1787இல் வைத்திலிங்கச் செட்டியார் இக்கோயிலைக் கட் 0 வருடங்களின் பின் இத்தகைய அனர்த்தங்கள், அழிவுகள் ல்களால் சேதமடைந்த இராஜகோபுரத்தினையும் ஆலயத்தின் டம் நஷ்டஈடு கோரியபோதும் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாத ஆலயத்தின் இராஜகோபுரமானது துரிதகதியில் நிர்மாணிக்கப்பட்டு, வைத்தீஸ்வரன் சுவாமியின் அருளால் பஞ்சதள இராஜகோபுரமாக து என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

70அடி உயரமானதாகும். அதுமட்டுமன்றி, பஞ்சதளங்களைக் ய அமைக்கப்பட்டுள்ளதுடன், இதில் காணப்படும் கூடுகளின் ரிய உடல் நிர்மாணத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. மந்திருக்கும் வாயில்கள் அவற்றிற்குரிய தத்துவ விளக்கத்துடன் ளைக் கொண்ட வாயில்கள் காணப்படுகின்றன. இந்த ஐந்தும் அமைகின்றன. இங்ஙனம் நம்முடைய அமைப்பிலே உள்ள யில்கள் சின்னமாக விளங்குகின்றன.

ின் அழகு அதில் தீட்டப்பட்ட வர்ணத்தையும் அடிப்படையாகக் னமாடிய சிவனின் உடலில் பூசப்பட்டிருந்த விபூதியின் சாம்பல் ாகத் தீட்டப்பட்டுள்ள அற்புதத்தைக் காண இரு கண்களும் நகும் கொண்ட கோபுரம் அங்கு குடிகொண்டிருக்கும் சிவனின் மலும் அழகூட்டிக் கொண்டிருக்கின்றது எனின் மிகையாகாது.

### ின் பரிவாரக் கோயில்கள்

க்குரிய ஆலயமாக இருந்துவரும் வண்ணை வைத்தீஸ்வரன் க் கொண்டமைந்திருக்கும் பெருமைவாய்ந்ததாகும். இக்கோயில் பரிவாரக் கோயில்களை யாழ்ப்பாணத்தின் வெவ்வேறிடங்களில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின் பரிவாரக் கோயில்களாக றகிலுள்ள ஐயனார் கோயில், காளி கோயில், கற்கட்டு வைரவர்



நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலி
ந்த ஆலயத்தின் தோற்றம்

கியன ஆகம முறைப்படி கட்டப்பட்ட சிறப்புவாய்ந்தவையாக ப்பிள்ளையார் கோயில் தவிர்ந்த ஏனைய கோயில்கள் யாவும் களாகவும் கருதப்படுகின்றன.

தாவான ஸ்ரீமான் வைத்திலிங்கச் செட்டியாரின் தந்தையாரான ாழ்ப்பாணம் வந்த காலந்தொட்டே (ஒல்லாந்த காலம்) பூசித்து தம் இடமே வேம்படிப் பிள்ளையார் கோயில் எனத் தற்போது க் கோயில் அமைத்த பெருமை வைத்திலிங்கச் செட்டியாரையே த்திருக்கும் இடம் வியாபாரத்தாபனமாக இருப்பதால் அதனைக் பர். வைத்தீஸ்வரன் கோயிலில் நடைபெறும் விசேட காலங்களில் ருக்கு அபிஷேகம் செய்தபின்பே ஏனைய கிரியைகள் ஆரம்பமாகும். ல் அமைந்திருக்கும் மற்றைய பரிவாரக் கோயில் கற்கட்டு வைரவர் யிலில் நடைபெறும் சிவன் உற்சவங்களின் போது பூர்வாங்கக் கு வந்து விசேட அபிஷேகங்களைச் செய்தபின்னர் பிரதான கோயிலில் ஆரம்பிப்பார்கள். இத்தகைய பரிவாரக்கோயில்கள் வைத்தீஸ்வரன் கோயிலின் விசேட தன்மையாக அமைந்துள்ளன.

*சிவனடியான்*

அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவது பரிவாரக் கோயிலான வண்ணை மேற்கில் உள்ள ஐயனார் (ஸ்ரீபூரணை புட்கலை சமேத ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் அல்லது அரிகர புத்திர ஐயனார்) கோயிலாகும். இதற்கு அருகில் அமைந்திருக்கும் மற்றொரு பரிவாரக்கோயில் பிடாரி அல்லது காளி (ஸ்ரீ மங்கள மகாளி அம்பாள்) கோயிலாகும். இவ்விரண்டு கோயில்களுமே தட்டாதெருச் சந்திக்கு அருகில் அமைந்திருக்கின்றன. வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின் மஹோற்சவ காலங்களில் குறிப்பாக சிவன் உற்சவத்தின்போது பூர்வாங்கமாகச் சில கிரியைகளைச் செய்யும் பாரம்பரியம் இப்பரிவாரக்

(9ஆம் பக்கம் பார்க்க)

## சிவபூமியில் ஒளிவீசும் வைத்தீஸ்வரம்

இலங்கையைத் தவயோகி திருமூலநாயனார் சிவபூமி என அழைத்தார். இலங்கையில் வாழ்ந்த இந்துக்களில் பெரும்பாலானவர்கள் சைவர்களாகவே இருந்தனர். விஜயன் காலத்திலிருந்தே இலங்கையின் நான்கு எல்லைகளிலும் சிவாலயங்கள் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவற்றில் திருக்கேதீஸ்வரம் சம்பந்தர், சுந்தரராலும், திருக்கோணேஸ்வரம் சம்பந்தராலும் பாடப்பெற்ற பெருமைமிக்க தலங்கள் ஆகும். முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், சந்திரசேகரேஸ்வரம் என்பன மற்றைய சிவஸ்தலங்களாகும். இவற்றில் ஈழத்தின் தென்பகுதியில் இருந்த சந்திரசேகரேஸ்வரம் என்னும் திருத்தலம் அந்நியர்களின் படையெடுப்பினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. வன்னி மாவட்டத்தின் ஒட்டுசுட்டானிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலையிலும் தான்தோன்றி ஈஸ்வரங்கள் காணப்படுகின்றன. சைவர்களால் கோயில் என்று போற்றப்படும் சிதம்பரம் நடராஜப்பெருமானின் திருக்கோயிலுக்கும், யாழ்ப்பாணத்துச் சைவபெருமக்களுக்கும் இடையே நீண்டகாலமாகத் தொடர்பு இருந்துவந்தது. சுவாமி ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர், புண்ணிய நாச்சியார் போன்ற பலர் சிதம்பரத்தில் பல திருப்பணிகளைச் செய்துள்ளார்கள்.

ஈழத்தில் சைவத்தின் வளர்ச்சிக்கு செட்டியார் சமூகம் ஆற்றிய பணி அளப்பரியதாகும். இலங்கையின் பல நகரங்களிலும் வியாபாரம் நடத்திய செட்டிமார்கள் அங்கே சைவக் கோயில்களை ஸ்தாபித்தார்கள். ஆலயத்தில் நித்திய, நைமித்தியக் கிரியைகள் ஒழுங்காக நடைபெற வழிவகைகளும் செய்துவைத்தார்கள். பல தர்ம கைங்கரியங்களுக்கும் வரையாது வழங்கினார்கள். ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை கட்டுவதற்குப் பொருளுதவி கொடுத்து செட்டிமார் சமூகத்தினரே உதவிசெய்தார்கள். வடமாகாணத்தின் தலைநகரமாக விளங்கும் யாழ்ப்பாணப் பட்டினத்தின் மத்தியிலே கி.பி. 1790ஆம் ஆண்டு வைத்திலிங்கச்செட்டியார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிவன் ஆலயமே வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் ஆகும். வைத்திலிங்கம் செட்டியாருக்கு கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் குருவாகவும் வழிகாட்டியாகவும் இருந்தார்.

நகரத்தின் நடுவே இருந்து அருளாட்சி புரியும் தையல்நாயகி சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் ஆலயம் சைவமும், தமிழும் வளர்க்கும் அறநிலையமாகவும் விளங்கியது. சைவத்தின் காவலராகவும், சைவ சேனாதிபதியாகவும் திகழ்ந்த நாவலர் பெருமான் 31.12.1847ஆம் ஆண்டு தனது இருபத்தைந்தாவது வயதில் சைவப் பிரசங்கம் செய்யும் மரபினை வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலேயே ஆரம்பித்தார். சைவத் திருவேடத்தோடு தோன்றி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்தின் வசந்த மண்டபத்தில் சமயப் பிரசங்கம் செய்துவந்தார். இவர் சைவப் பிரசங்கம் செய்வதை வியாபாரமாகவோ, தொழிலாகவோ மாற்றாமல் ஞான யாகமாகவே தனது ஜீவிய பரியந்தும் செய்துவந்தார். இன்று நமது ஆலயங்களிலேயே நடைபெற்று வருகின்ற சைவப் பிரசங்க மரபுக்கு வித்திட்டவர் நாவலரே ஆவார். நாவலரைத் தொடர்ந்து வித்துவ சிரோண்மணி பொன்னம்பலபிள்ளை சங்கரசுப்பையர், நாகலிங்கம் சுவாமிகள், பண்டிதர் மாணிக்கத் தியாகராஜா போன்றோர் சைவப் பிரசங்கங்களையும், சங்கீத கதாப் பிரசங்கங்களையும் செய்தார்கள். நல்லை ஆதீனத்தின் ஸ்தாபகராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் (மணி ஐயர்) இங்கே பல சங்கீத கதாப் பிரசங்கங்களைத் தொடர்ந்துசெய்துவந்தார். இன்றும் பல சைவப் பெரியார்களின் சமயப் பிரசங்கப் பணியை ஊக்குவித்து, வளர்க்கும் ஒரு கேந்திர நிலையமாகவே வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் திகழ்கின்றது.

சிவாகம விதிமுறைகள் தவறாது அமைக்கப்பெற்ற வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் ஆகம விதிமுறைகளுக்கு அமையக் கிரியைகளும் ஒழுங்காகவே நடைபெற்று வருகின்றன. வடமொழி வேதத்திற்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் தமிழ் வேதமாகிய திருமுறைகளுக்கும் இங்கே வழங்கப்படுகின்றது. தெய்வத்தமிழாகிய திருமுறைகளைத் தந்த அருளாளர்களின் குருபூசைத் தினங்கள் இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சிவனை மறவாச் சிந்தையாளர்களாக வாழ்ந்த சிவனடியார்கள் அறுபத்து மூவருக்கும் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.


சைவ சமயம் சிவசம்பந்தம் உடையது. சைவர்கள் சிவனையே முழுமுதற் கடவுளாக வழிபடுகிறார்கள். சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகவே விநாயகப் பெருமானையும், முருகப் பெருமானையும் சைவர்கள் வழிபட்டு வருகிறார்கள். வைரவப் பெருமானையும், வீரபத்திரப் பெருமானையும் சிவனுடைய மூர்த்தங்களாகவே சிவ விக்கிரவியல் குறிப்பிடுகிறது. தெய்வத் தமிழாகிய பன்னிரு திருமுறைகளும் சிவனையே முழுமுதற்கடவுளாகக் குறிப்பிடுகிறது.

*"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்*
*சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"*

என்பதே அப்பர் பெருமானின் வாக்கும் ஆகும்.

"சிவனொ டொக்கும் தெய்வம் தேடினும் வேறில்லை" என்பதே தவயோகி திருமூலநாயனாரின் கருத்துமாகும். சைவ சித்தாந்தத் தத்துவத்தை தமிழிலே விளக்கும் பிரமாண நூல்களாகிய மெய்கண்ட சாஸ்திரங்களும் சிவனையே முழுமுதற்கடவுளாகக் குறிப்பிடுகின்றன. ஈழத்துச் சைவர்கள் தொன்றுதொட்டு சிவவழிபாட்டுக்காரர்களாகவே இருந்துவந்தார்கள். சிவநாமம் பேசும் சிவபூமியாகவே ஈழமணித் திருநாடு திகழ்ந்தது. சிவபூமி புண்ணியபூமியாகவும், தர்ம துவீபம், அதர்ம துவீபமாகவும், ஞான பூமியாகத் திகழ்ந்த யாழ்ப்பாணக் குடாநாடு சிதைவுற்ற பூமியாகவும் திருத்தலங்கள் பல இருந்து அருளாட்சி செய்த இடங்கள் சுடுகாடாகவும் மாறியதற்கு யாது காரணம் என்பதை சைவத் தமிழர்கள் அனைவரும் மீள்பரிசீலனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. இன்று நம்மவர்களிடம் பல புதுவகையான வழிபாடுகள் வியாபார நோக்கில் உட்புகுந்து எங்களுடைய பாரம்பரிய வழிபாடாகிய சிவவழிபாட்டினை அழித்துவருவதைக் காண்கிறோம். "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்று மகாகவி உருத்திரமூர்த்தி கூறியதுபோல, வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானுக்கு நடைபெறும் மகாகும்பாபிஷேகம் ஈழத்தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்போகும் விடிவு, காலத்துக்கு கட்டியம் கூறுவதுபோலவே காணப்படுகிறது. திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகிய சிவத்தலங்களின் கதவுகளும் திறக்கப்பட்டால் ஈழமணித் திருநாட்டில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட்டுவிடும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்



இராஜகோபுர நிர்மாணவேலைகள்
1970களில் ஆரம்பிக்கப்பட்டபோது
அன்றைய கோபுரத்தின் தோற்றம்

## சர்வசாதகரின் செய்தி

*"சிவேந ஸ்தாபிதம் சைவம்*
*சைவேந ஸ்தாபிதம் சிவம்"* – என்பது ஆகம வாக்கியமாகும். சிவனால் சைவசமயம் ஸ்தாபிக்கப்பட்டது. சைவனால் சிவன் ஸ்தாபிக்கப்படுகிறான் என்பது பொருளாகும்.

நல்ல முகூர்த்தத்தில் லிங்கத்தை ஆவுடையாரில் பிரதிஷ்டைசெய்து மஹா கும்பாபிஷேகஞ் செய்து திருவருட் சத்தியை அதில் பிரவகிக்கச் செய்யும் கிரியைகளே மஹாகும்பாபிஷேகத்தில் அனுக்ஞை முதல் பிரதிஷ்டா பலன் வரையுள்ள கிரியை களின் தாற்பரியமாகும். சிவனை வணங்கி ஆத்ம ஈடேற்றமடைவதே இவ்வுலகில் பிறப்பெடுத்த ஆன்மாக்களின் முதல் நோக்கமாக இருக்கவேண்டும். அதற்கு ஆலயங்கள் மிகமிக அவசியம்.

வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுடைய மஹா கும்பாபிஷேகமும் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுர கும்பாபிஷேகமும் நடைபெறும் இந்நாளில் அவனருளால் ஆலய எஜமானர்களும் பக்தகோடிகளும் எல்லாச் செல்வங்களும்பெற்று பெருமையோடு வாழ ஆசிகூறுகிறேன்.

சிவாகமஞானபாஸ்கரன் **சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்**
(மேற்படி கும்பாபிஷேக சர்வசாதகர்)

## ஆலய குருவின் செய்தி

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே."

மக்களது வாழ்க்கையின் அடிப்படையிலேயே சமயம் இரண்டறக்கலந்துள்ளது. "சைவத்தின்மேற் சமயம் வேறில்லை" என்பது ஆன்றோர்வாக்கு. சைவத்தின் மரபுகளைப் பேணிக் காக்கும் பெரியோர்கள் புராதன ஆலயங்களை புனருத்தாரணம் செய்வார்கள். அதுவே சைவத்துக்கும் தமிழுக்கும் நாம் செய்யும் முதலாய கடனாகும்.

நாம் தமிழ் ஈழத்திலே புராதன சிவாலயமாக விளங்கும் வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம் இற்றைக்கு இருநூறு வருடத்துக்கு முன்னர் தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்து குடியேறிய கோபாலன் செட்டியார் வைத்திலிங்கம் செட்டியாரால் நிர்மாணம் செய்யப்பட்டு, அன்றுமுதல் இன்றுவரை அவர்கள் சந்ததியினரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

இக்கோயில் இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு, புதுப்பொலிவுடனும் அழகிய பஞ்சதள ராஜகோபுரத்துடனும், புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்படும் திருத்தொண்டர் அறுபத்து மூவருடனும் சிறப்புற விளங்கி, மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

சித்தர் மன கங்கர்யத்தால் நாடும், தமிழ்மக்களும் சுபீட்சமுடனும், சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழ முடியுமென்பது நம்பிக்கை.

இதற்குக் காரணஸ்தர்களாக விளங்கும் ஆலய தர்மகர்த்தாவும், பக்த ஜனங் களும் இறையருளால் பெருவாழ்வு வாழ ஆசிகூறி அமைகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

பிரதிஷ்டா பிரதம குரு பிரதிஷ்டா சிரோன்மணி,
**சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்**
(வண்ணை தேவஸ்தானம்)

தரமான அச்சுவேலைகளா?

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் ஒரு கணனி புதுயுகம்



நவீன முறையிலான கணனி அச்சு வேலைகளை நவீன பாணியில், சிறந்த தரத்தோடு, குறித்த நேரத்தில், நல்ல முறையில் செய்து பெற்றுக்கொள்ள 28-01-2002 தைப்பூசத்தன்று குதூகலமாக ஆரம்பமாகின்றது

**ஸ்ரீ கண்ணகி அச்சகம்**

**SRI KANNAKI PRINTERS**

*AND*

**COMPUTER PRINTING**

பிரதான வீதி, (C/20443) அச்சுவேலி.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 - 01 - 1933

மறைவு 27 - 01 - 1999

### திருமதி நல்லம்மா சிற்றம்பலம்

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தன ஆனாலும்
நீண்ட உன் நினைவுகள் மறக்குமா அம்மா!
வேண்டுகிறோம் சாந்தி எம் முதலி அம்பாளிடமே
தூண்டுகிறோம் அக விளக்கை நித்தம் துலங்கிட அருளினையே!

பிரிவால் துயருறும்:
சி.சிற்றம்பலம் (காந்தி),
சி.ராதாகாந்தி குடும்பம் (கனடா),
தி.வனிதாகாந்தி குடும்பம் (யாழ்ப்பாணம்),
அ.லலிதாகாந்தி குடும்பம் (கொழும்பு),
சி.ஜெயாகாந்தி குடும்பம் (அமெரிக்கா),
பு.லதாகாந்தி குடும்பம் (கனடா),
சி.பிரபாகாந்தி குடும்பம் (கனடா). (97505)

*சந்தாதோட்டம்,*
*புலோலி கிழக்கு,*
*புலோலி.*

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



### அமரர் நல்லதம்பி இராசதுரை

*(சங்கானை இராசதுரை, இளைப்பாறிய இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி - கோண்டாவில்சாலை)*

25-12-2001 செவ்வாய்க்கிழமை சுவீடன் நாட்டில் அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவைக்கேட்டு கோப்பாயிலுள்ள அவரது இல்லத்துக்குச் சென்று ஆறுதல் கூறியோருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மாகேஸ்வர பூசையும் நாளை (28-01-2002) திங்கட்கிழமை முழுநிலா நாள் அன்று நண்பகல் கோப்பாய் மத்தி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. அமரரின் ஆத்மசாந்திக்காக நடைபெறும் இந்த இறை நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி இராசதுரை தங்கம்மா *(மனைவி - சுவீடன்)*,
*பிள்ளைகளான:*
இ.புஷ்பராசா குடும்பத்தினர் *(கனடா)*,
இ.குகேந்திரராசா குடும்பத்தினர் *(சுவீடன்)*,
இ.மகேஸ்வரன் குடும்பத்தினர் *(சுவீடன்)*,
திருமதி விஜயரட்ணம் ரஜினி *(சுவீடன்)*,
திரு.இ.றஜிந்தன் *(சுவீடன்)*,
திருமதி பாலகிருஷ்ணராசா குமுதினி *(கனடா)*,
திருமதி மகேஸ்வரன் காமினி *(கனடா)*,
வ.சுப்பிரமணியம் *(மைத்துனர் - கோப்பாய்)*.

*"பவானி இல்லம்"*
*பருத்தித்துறை வீதி,*
*கோப்பாய் மத்தி.*
(97510)

## வெட்டுக்காயத்துடன் 2 இளைஞர்கள் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.27

கசிப்பு ஒழிப்புப் பணியில் ஈடுபட்ட இளைஞர்களை கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட கும்பல் ஒன்று தாக்கியதில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

நீர்வேலி வடக்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான சின்னத்தம்பி சிவராசா (வயது 22), இராசையா இந்திரகுமார் (வயது 30) ஆகிய இருவருமே வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் நேற்று முன்தினம் யாழ்.போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நீர்வேலிப் பகுதியில் கும்பலொன்று கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவருவதை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள், குறித்த கும்பலைச் சேர்ந்தோரைப் பிடித்து பொலீஸாரிடம் கையளித்தனர்.

யாழ்.நீதிமன்றில் குற்றப்பணம் செலுத்திய பின்னர் விடுவிக்கப்பட்ட இக் கும்பலைச் சேர்ந்தோர் பின்னர் மேற்படி இரு இளைஞர்களையும் வெட்டிக் காயப்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6-9)

## காய்ச்சலால் பெண் மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.27

காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மற்றொருவர் நேற்றுமுன்தினம் மரணமானார்.

இணுவில் தெற்கைச் சேர்ந்த கோமஸ்வரி சபாநாயகம் (வயது 52) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு கடந்த 22ஆம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் 3 நாள்களின் பின் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார்.

மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-15)

## தபாலகத்தில் வீடியோ பிரதிகளை ஏற்பது நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.பிரதம தபாலகத்தில் வீடியோ நாடாக்களை ஏற்றுக்கொள்ளும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தபாலதிபர் சி.மார்க்கண்டன் அறிவித்துள்ளார்.

தற்போது போதிய வீடியோ நாடாகள் கையிருப்பில் இருப்பதாகவும், அவை பரிசோதனையின் பின்னர் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டதும் வீடியோ நாடாக்களை ஏற்றுக்கொள்ளும்பணி மீண்டும் ஆரம்பமாகும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-7)

## நயினை அம்மன் ஆலயத்தில் தைப்பூச விழா

யாழ்ப்பாணம்,ஜன.27

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா நாளை திங்கட்கிழமை விசேட உற்சவமாக நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளின் பின்னர் நண்பகல் 12.30 மணிக்கு அம்பாள் அழகிய சித்திரத் திருமஞ்சத்தில் வீதியுலாவரும் அருங்காட்சியை அடியார்கள் தரிசிக்கலாம். ஆலயத்திற்குச் செல்லும் அடியார்களுக்கு அன்னதானம் செய்ய அமுதசுரபி அன்னதான சபையினர் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (க-11)

## மூதாட்டிக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம்,ஜன.27

சுருட்டைப் பற்றவைப்பதற்காக விளக்கில் பிடித்தபோது அது தட்டுப்பட்டு வீழ்ந்து தீப்பற்றியதால் மூதாட்டி ஒருவர் எரிகாயங்களுக்குள்ளானார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த கார்த்தி சின்னாச்சி (வயது 85) என்ற மூதாட்டியே எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விளக்கு தட்டுப்பட்டு மண்எண்ணெய் உடலில் சிந்தியதாலேயே இவ்விபத்து நேரிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-9)


**தைப்பூச இசை வகுப்புகள்**

| | | |
|---|---|---|
| ※ ஓர்கன் | ※ கிற்றார் | ※ மெலோடிக்கா |
| ※ வாய்ப்பாட்டு | ※ வீணை | ※ வயலின் |
| ※ புல்லாங்குழல் | ※ றெக்கோடர் | ※ மென்ரலீன் |

நாளை (28.01.2002) திங்கள் ஆரம்பம்.

*தொடர்புகளுக்கு:*

**நியூ வீணா கானம்**

16/2, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ் நகர் (12.30-7.30 p.m.)
கிளை: 62/1, வைமன் வீதி, நல்லூர்,
ஆலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை (9.30-12.30)

*ஆசிரியை:* வாசுகி ரங்கன்

"நியூ றிதம்ஸ்" ஸ்ரேசன் றோட், கோண்டாவில். (4.30 p.m.) (97540)


உ
முருகன் துணை

## இணுவில் கந்தசுவாமி கோயில்

### திருமஞ்சத்திருவிழா

**28-01-2002 திங்கட்கிழமை தைப்பூசம்**

முற்பகல்: 10.00 மணி - சண்முகருக்கு 1008 சங்காபிஷேகம்
பிற்பகல்: 2.00 மணி- "இணுவைக் கந்தன் கீர்த்தனைகள்" வெளியீட்டுவிழா
(*ஆக்கம்:* மகாவித்துவான் ந.வீரமணிஐயர்)
பிற்பகல்: 4.30மணி - ஆறுமுகப் பெருமான், வள்ளி, தெய்வயானை சமேதராக கலைநுட்பம் நிறைந்த திருமஞ்சத்தில் வீதியுலாவருவார்கள்

முருகன் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உபயகாரர்களும்,
தர்மகர்த்தா சபையினரும்.
(97499)


**திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்**

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகலவசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைபுரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒருமுறை விஜயம் செய்து பார்த்தால் உண்மைபுரியும்.

No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo- 13. T.P.No. 01 433182, 472582. (95982)



**VACANCY**

Colombo based organisation wishes to recruit the services of a marketing oriented person in Jaffna to lookafter its marketing activities. Persons with marketing experience and excellent communication skills and fluency in Tamil, English and Sinhala are preferred.

*Please Apply within 7 Days.*
ADVT.NO:- 1439,
**C/o- NEW UTHAYAN PUBLICATIONS LTD,**
**361, Kasthuriar Road,**
**Jaffna.**
(C/20466)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மலர்வு 1930 ◊ 11 ◊ 10

உதிர்வு 2001 ◊ 12 ◊ 28

### அமரர் மருதப்பு இராசரத்தினம்

**இறைவன் திருவடி நிழலில் நித்திய ஆறுதல் தேடிய அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு உதவி செய்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (27-01-2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நவக்கிரி மேற்கு,*
*புத்தூர்.*
(97404)

*பிரிவால் துயருறும:*
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



| அமரர் | திருமதி |
|---|---|
| முருகர் செல்லையா | செல்லையா சிவக்கொழுந்து |

(முன்னாள் Belt Attendant
சிமெந்துத் தொழிற்சாலை)

10.02.1923 ← தோற்றம் → 12.08.1924
29.12.2001 ← விண்ணுலகில் → 28.12.2001

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

அன்பூட்டி அறிவூட்டி பண்பூட்டி
பற்பல வழிகளிலும் வழிகாட்டி, விட்டு, விட்டு
எம்மையெல்லாம் ஆறாத்துயரத்தில்
ஆழ்த்தி தம்பதிகளாய்ச் சென்றீர்கள்
உங்கள் இறுதிப்பயணத்தையும் காணக் கொடுத்து
வைக்கமுடியாத பாவிகளான பிள்ளைகளும்
உங்கள் அன்பில் வாழ்ந்த பிள்ளைகளும் மருமக்களும்
பேரப்பிள்ளைகளும் உங்கள் பிரிவால் தவிக்கின்றனர்.

இன்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய், சசி மில் வீதியிலுள்ள எமது இல்லத்தில் தாயாரினதும் - எதிர்வரும் [30.01.2002] புதன்கிழமை 'சோபி இல்லம்', அளவெட்டி தெற்கு, அளவெட்டியில் தந்தையாரதும் - வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*பிள்ளைகள்:*
செ.பாலரத்தினசிங்கம்
*(அரசினர் வைத்தியசாலை, சங்கானை),*
செ.வர்ணகுலசிங்கம்
*(சிமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை.)*

*சசி மில் வீதி,*
*சண்டிலிப்பாய்.* (97597)

---

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட
**பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களுக்கான**
## அவசர கலந்துரையாடல்

*இடம்* :- யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை
*காலம்* :- நாளை **28.01.2002** திங்கட்கிழமை
காலை **10.00**மணி.

புலோலி. (C/20502) - ஏற்பாட்டாளர்.

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் நாளை தைத்திங்கள் 15ஆம் நாள் (28.01.2002) திங்கட்கிழமை பகல் 9.56 மணி முதல் 11.01 மணி வரை அமைந்துள்ள பௌர்ணமி திதியும் பூச நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சதானந்தன் (ஈசன்)**
(ஈசன் மொத்த விற்பனையாளர்)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சுதாஷினி (செல்வி)**
(கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்)
அவர்களுக்கும்

யாழ்ப்பாணம் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய இறைவன் திருவருள் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி நா.சோமசுந்தரம்
வள்ளிநாயகி குடும்பத்தினர்
*63, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*

திரு.திருமதி தேவசேனாதிபதி
திரு. திருமதி ப.சரவணபவன்
*"பிருந்தாவனம்"*
*13 'B', ஐயனார்கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(இரு வீட்டார் அழைப்பு) (004)

---

## விவசாய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.27

கொக்குவில் லயன்ஸ் கழகமும் இணுவில் லயன்ஸ் கழகமும் விவசாய பீட தகவல் தொடர்பு மையத்துடன் இணைந்து நடத்தும் விவசாயக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

"யாழ்.மாவட்டத்தின் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான தீர்வும்" என்ற தலைப்பில் விவசாய பீட பீடாதிபதி எஸ்ராஜதுரையும், 'விலங்கு வேளாண்மையின் அடிப்படைப் பிரச்சினையும் அதற்கான தீர்வும்' என்னும் தலைப்பில் பேராசிரியர் ஏ.நவரத்தினராஜாவும், 'இரசாயன பாவனை' என்னும் தலைப்பில் ஜி. திருக்குமரனும் கருத்துரை வழங்குவர். (ஐ-3)


**C.MATHS**
**A/L 2004**
Mr.துவசேகர் B.Sc.
**ஆரம்பம்:**-29/1-செவ்.4 p.m.
★ Tamil Mr. அருள்
★ Log. Mr. மகிந்தன்
★ Geo. Mr. கிரி
(C/20505)
SHAMROCK

**நிறஞ்சனாஸ்** சங்கானை
விஜய், தேவயானி, ரம்பா
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்
கமல், சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
**பம்மல் K சம்பந்தம்**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (பு.நே.)
(C/20097)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந்த், இஷா,
ரம்யா கிருஷ்ணன், வடிவேல்
நடித்த
**நரசிம்மா**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(002)

**லஷ்சுமி** இணுவில்
மம்முட்டி, முரளி, ரம்பா,
தேவயானி, அப்பாஸ் நடித்த
**ஆனந்தம்** (ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (ப.நே.)
(006)


---

## வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம் மஹாகும்பாபிஷேக சிறப்பிதழ் தொடர்ச்சி...

கோயிலுக்கு உண்டு. அதாவது மாசி மாதத்தில் கொடியேற்றம் ஆரம்பமாகும் முன்னர் வரும் தைப்பருவத்திற்குச் சிவன் கோயிலில் உள்ள எழுந்தருளும் ஐயனார் சுவாமி, பரிவாரக் கோயிலான ஐயனார் கோயிலுக்குச் சென்று காப்புக் கட்டும் நிகழ்ச்சி நடைபெறும். அடுத்து மாசிப் பருவத்திற்குச் சிவன் கோயிலிலிருக்கும் காளி அம்பாள் எழுந்தருளி பரிவாரக் கோயிலான காளி கோயிலுக்குச் சென்று காப்புக் கட்டிவரும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. இவையாவும் நடைபெற்றபின் சிவன் கொடியேற்றம் நடக்க முன்பு வரும் முதல் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் முறையே முத்துமாரி அம்மன் கோயிலுக்கும், கற்கட்டு வைரவர் கோயிலுக்கும் சென்ற விசேட பூசைகள் நடத்தியபின்புதான் வைத்தீஸ்வரன் கோயிலின் கொடியேற்றம் ஆரம்பமாகின்றது. ஆனால், இத்தகைய நடைமுறை அம்மன் கொடியேற்றத் திருவிழாவின்போது நடைபெறுவதில்லை. அதுமட்டுமன்றி, நவராத்திரி பூசை காலங்களில் அதன் இறுதி நாளான விஜயதசமியன்று நடைபெறும் வாழை வெட்டும் உற்சவம் காளி கோயிலிலேயே நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தினத்தில் சிவனின் சந்திரசேகர மூர்த்தியும் எழுந்தருளி காளி கோயிலுக்கு வீதிவலமாகப் புறப்பட்டுச் சென்று வாழைவெட்டு உற்சவத்தை நடத்திவிட்டு மீண்டும் கோயிலை வந்தடையும். இத்தகைய பாரம்பரியமும் தொன்மையும்வாய்ந்த இச்சிறப்பு நடைமுறைகள் வைத்தீஸ்வரன் கோயிலையும் அதன் பரிவாரக்கோயிலையும் என்றும் பின்னிப் பிணைத்து வைக்கின்றன.

பண்ணையில் அமைந்துள்ள மாரி அம்மன் கோயில் வைத்தீஸ்வரன் கோயிலின் எல்லைக் கோயிலாக மட்டுமன்றி, அங்கிருந்து மக்கள் அனைவரையும் காக்கும் காவற் தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது. இதனை மீனாட்சி அம்மன் கோயில் எனவும் அழைக்கும் வழக்கம் உண்டு. எனினும், அங்கு குடிகொண்டிருக்கும் தெய்வம் மாரி அம்மனாகும். இதனாலேயே இது பண்ணை முத்துமாரி அம்மன் கோயிலென எல்லோராலும் அழைக்கப்படுகின்றது.

இத்தகைய நீண்ட வழக்காறுகளைக்கொண்டு அமைக்கப்பட்ட இப்பரிவாரக் கோயில்கள் யாவும் அன்றுமுதல் இன்றுவரை சிறப்பாக நித்திய, நைமித்திய பூசைகளை மேற்கொண்டு வழிபடப்பட்டுவருகின்றன. வைத்தீஸ்வரன் கோயிலில் நடைபெறும் மஹோற்சவங்கள், விசேட உற்சவங்கள் காலத்திலெல்லாம் இப்பரிவாரக் கோயில்களுக்குத் தேவையான எல்லாவிதமான குறிப்பாக வேஷ்டி, சேலைகள் மற்றும் பூசைக்குரிய அனைத்துப் பொருள்கள், பொங்கல் காலங்களில் தேவையான பானைகள், இதர சாமான்கள் அனைத்துமே வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்தே எடுத்துச்செல்லப்படுகின்றன. இவ்வாறான இன்னோரன்ன சிறப்பம்சங்கள் வைத்தீஸ்வரன் கோயிலையும் பரிவாரக் கோயிலையும் ஒன்றுடன் ஒன்று பிணைத்து இரண்டிற்குமுள்ள தொடர்பை எடுத்தக்காட்டுவனவாக அமைந்திருப்பது மிகவும் போற்றுவதற்குரிய அம்சங்களாகும்.

### வில்லூன்றிப் புனித தீர்த்தம்

யாழ்ப்பாணத்தின் புராதன ஆலயமான வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் அமையப்பெற்ற சிறப்புவாய்ந்த ஒரு சிவத்தலமாகும். இத்தலத்தின் தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திரசங்கம தீர்த்தமாகும். வைத்தீஸ்வரன் கோயிலுக்கு என உருவாக்கப்பட்ட இப்புனித தீர்த்தம் அமைந்துள்ள நிலங்கள் தற்போது தர்மகர்த்தாவாக இருந்து நிர்வகித்து வரும் திரு.வை. கந்தப்பச்செட்டியார் காலத்தில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு, அவர் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக அதேகாலத்திலேயே இத்தீர்த்தம் அமைந்துள்ள நிலம் திரும்பவும் வைத்தீஸ்வரன் கோயிலுக்குக் கையளிக்கப்பட வேண்டுமென 19.04.1994ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்விடயம்சம்பந்தமாக தற்போதைய அரச அதிபர் திரு.சண்முகநாதன் அவர்களுடன் தொடர்புகொண்டபோது, அவற்றை உடனடியாகக் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் உறுதியளித்துள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ✳

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோரஞ்சிதம் செல்வராசா

ஆனைக்கோட்டை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா, கண்டி வீதி, இல.04, நகரசபை உத்தியோகத்தர் விடுதியில் வசித்து வந்தவரும், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியையுமான திருமதி மனோரஞ்சிதம் செல்வராசா அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் வவுனியா நகரசபை செயலாளர் வி.எஸ்.எஸ்.செல்வராசா அவர்களின் அன்பு மனைவியும் வவுனியா தமிழ் ம.மகா வித்தியாலய மாணவன் மதுரனின் அன்புத் தாயாரும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சுந்தரம் - பரமேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் வேலணையைச் சேர்ந்த சுப்பிரமணியம் - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் ஸ்ரீஸ்கந்தராசா (மேல் நீதிமன்ற நீதிபதி, கொழும்பு - 2), ஜீவரஞ்சிதம் (உதவிப் பணிப்பாளர், லஞ்ச ஊழல் ஆணைக்குழு, கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் பழனிவேற்பிள்ளை (ஓய்வுபெற்ற கணக்காளர், கொழும்பு), திருமதி அன்னலட்சுமி வல்லிபுரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இரத்தினராசா (முன்னாள் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), கனகநாயகம் (விரிவுரையாளர் - ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி), திசைநாயகம்பிள்ளை (ஆசிரிய ஆலோசகர், வேலணை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.04, நகரசபை உத்தியோகத்தர் விடுதி,*
*கண்டி வீதி, வவுனியா.*
*தொலைபேசி இலக்கம்: 22488* (C/20501)

தகவல்:
வி.எஸ்.எஸ்.செல்வராசா
(கணவர்)

## திருமதி செல்லத்துரை அன்னம்

தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னப்பா - வள்ளியம்மை தம்பதிகளின் இளைய புதல்வியும் சிறுப்பிட்டி வடக்கு காலஞ்சென்ற நாகமுத்து செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியுமாகிய திருமதி செல்லத்துரை அன்னம் அவர்கள் 25.01.2002 வெள்ளிக்கிழமை பின்னிரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நடராசா (இளைப்பாறிய பொறுப்பதிகாரி, அச்சுவேலி பிரதேச சபை), மகேஸ்வரி, முத்துத்தம்பி (மீன்பிடிக் கூட்டுத்தாபனம், கொழும்பு), மனோன்மணி (தேவி), பத்மராணி (கனடா), லீலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மனோன்மணி (தாவடி) மற்றும் தங்கராசா (இளைப்பாறிய அதிபர்), Dr.ஜெகதாம்பாள் (மருத்துவர், அக்கராயன் அரசினர் வைத்தியசாலை), பாலசுப்பிரமணியம் (நாதன்ஸ் சவுண்ட்ஸ், சிறுப்பிட்டி), Dr. ஸ்ரீகாந்தா (மருத்துவர், கனடா), ஸ்ரீகரன் (பிரான்ஸ்), திருமதி நடராசா சயந்திரா (பத்தமேனி) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.01.2002) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி, கிந்திசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:-
பாக்கியநாதன் (மருமகன்)
(நாதன்ஸ் சவுண்ட்ஸ், சிறுப்பிட்டி).

*சிறுப்பிட்டி வடக்கு.* (97589)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## முழுநிலா நாள் க[illegible]ரங்கு

காலம் : நாளை (28.01.[illegible] கிழமை
பிற்பகல் 3.30 ம[illegible] நேரம்)

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

தலைமை : பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

கருத்துரை : உயிரினங்களில் குளோனிங்

வழங்குபவர்கள் : ஈ.குகானந்தன் B.Sc.
ரீ.ஜெயந்தன் B.Sc. (Spl.)

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:- சரண்யா தொ[illegible]
[illegible]
(யாழ்.இந்து ஆரம்ப [illegible]
யாழ்ப்பாணம். [illegible]

(C/20509)



## கல்வி மற்றும் சமூக வளர்ச்சி நிதிக்காக
சுன்னாகம் றோட்டறக்ட் கழகம்
நடத்தும் இசைவிருந்து
சாரங்கா இசைக்குழுவின்

# இராஜ ராகம்

காலம்:- நாளை (28.01.2002) திங்கட்கிழமை
இடம்:- மானிப்பாய் பிரதேச சபை - ரவீந்திரன் மண்டபம்
நேரம்:- மாலை 2.00 மணி.

காணத்தவறாதீர்! அனைவரும் வாரீர்!!

*முக்கிய குறிப்பு:-* காலை நடைபெறவிருந்த நிகழ்வு மாலை நிகழ்வோடு இணைக்கப்பட்டுள்ளதால் அதன் நுழைவுச்சீட்டு மாலை செல்லுபடியாகும்.

(C/20497) - தலைவர்.



## முழு நிலாக் கருத்தரங்கு

*மையப் பொருள்* : "உறவுகளில் தொடர்புகள்"
(RELATIONSHIP & COMMUNICATION)
*வழங்குபவர்* : அருட்திரு. எஸ்.டேமியன் அ.ம.தி. M.A.(Coun.Psy.)
*காலம்* : நாளை (28.01.2002) திங்கட்கிழமை
*நேரம்* : பி.ப. 3.30 மணி (இ.நே.)
*இடம்* : "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
*131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.*

(97583) - இயக்குநர்.


## முதலாம் வருட [illegible]ஞ்சலி

*தாயின் மடியில்*
*உதயம்*
*30 - 12 - 1941*



*இறைவன் அடியில்*
*ஒன்றல்*
*06 - 02 - 2001*

அமரர்
### தாமோதரம்பிள்ளை ஜெகநாதன்
*(ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)*
திதி: 27-01-2002

வருடமொன்றானாலும் உன்
வண்ணமுகம் மறக்குமோ?
உருவம் மட்டுமல்ல நினைவுகளும் எமது
இதயத்தில் நிலைத்திருக்கும்!
பருவங்கள் மாறினும் உங்கள்
பசுமை நினைவுகள் அழியுமோ?
ஒருபோதுமில்லை ஐயா! உலகில் யாம்
உயிரோடுள்ளவரை எம் உணர்வில் கலந்து
அருவாய் இருப்பினும் அப்பா! நீங்கள் எங்கள்
அருகில் இருப்பதாய் உணர்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*3ஆம் கட்டையடி,*
*கல்வியங்காடு.* (97451)

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நாளை திங்கட் கிழமை காலை 9 மணிமுதல் பௌர்ணமி ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. பஜனை மற்றும் விசேட சொற்பொழிவும் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)

## பொருள் தடை நீக்கம்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கீடுகளைத் தராமல் ஒழித்தது நீங்கள்.

இந்த இருதசாப்த காலத்தில் எமது மக்களுக்குத் தராமல் வெட்டிய நிதிப் பங்களிப்பைத் தாருங்கள். அரசுத் திணைக்களத்துக்குரிய நிதியை வழங்குங்கள். செயற்றிட்டங்களைச் செயற்படுத்த அனுமதியளித்து ஊக்கப்படுத்துங்கள்.

கண்ணிவெடி, மிதிவெடி போன்றவற்றை அகற்றுவதற்குரிய கருவிகளை வன்னிக்கு எடுத்துவரவும் பொதுமக்களின் பிரதேசத்திலிருந்து இந்தப் வெடிப் பொருள்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அனுமதி அளியுங்கள்.

இவற்றை விடுத்து சிமெந்து போன்ற கட்டுமானத் தேவைகளுக்கு வேண்டிய அடிப்படைப் பொருள்களைத் தடுத்து வைத்துக் கொண்டு லொறிகளை அனுப்புவதாகக் கணக்குக் காட்டுவது மக்களின் காதில் பூச்சுற்றும் வேலை.

வீடு, பாதுகாப்பான குடியிருப்பு, நீர்ப்பாசனக் குளங்கள், அணைகள், பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள், வீதி போன்ற - உள்ளகக் கட்டுமானப் பணிகளுக்குரிய நிதியைத் தாராளமாக ஒதுக்கி அத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான பொருள்களை லொறிகளில் அனுப்பிவையுங்கள்.

அதை விடுத்து வெறும் ஆடம்பரப்பொருள்களை அனுப்புவது மக்களின் பையில் கொஞ்சம்நஞ்சம் இருக்கும் பணத்தையும் அந்தப் பொருளகளை வாங்க வைப்பதன்மூலம் சூறையாடச்செய்து அவர்களை மேலும் ஒட்டாண்டியாக்கும் வேலையே தவிர வேறில்லை - என்றார் அவர். (ஐ)

## போதையில் உதைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாள் காலை தனது கணவனைக் காணவில்லை என்று கூறி எங்கும் தேடித்திரிந்துள்ளார். இந்த நாடகம் கடந்த பத்து தினங்களாகத் தொடர்ந்தது.

இறுதியில் கொலைசெய்யப்பட்டவரின் உறவினர் ஒருவர் கொலை செய்யப்பட்டவரின் வீட் டில் இருந்து பிணவாடை வீசுவதாகக் காத்தான்குடிப் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து மட்டக்களப்பு நீதிவான் மற்றும் ஆரையம்பதி வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்று காத்தான்குடி பொலீஸாரின் உதவியுடன் சடலத்தை தோண்டி வெளியில் எடுத்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக இராஜேந்திரத்தின் மனைவியை காத்தான்குடி பொலீஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6-9)

## களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மை விடுதலை செய்யவேண்டும் என்று கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்துக்கு பதில் கிடைக்காததை அடுத்து உணணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகக் கைதிகள் அறிவித்துள்ளனர்.

எத்தனை கைதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றனர் என்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை. (ஐ-3)


### எமது பிரமிட் Five Star வீடியோ CD வெளியீடுகள்

- காசி
- மஜ்னு
- பொன்னான நேரம்

வீடியோ விஷன்
யாழ்ப்பாணம்.
(C/20510)



### புதிய வீடியோ CD வெளியீடு

- வைரமேவல்

Five Star CD வெளியீடு
- பம்மல் K சம்பந்தம்
- மஜ்னு
- காசி

பிரதிகளை உடன் பெறலாம்.
அவ்டி
எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம்.
(C/20511)



### விசேட ஆங்கில வகுப்பு

Spoken & Gra[illegible]
Audio, Vi[illegible]
Supporting [illegible]

O/L எடுத்த, A/L படிக்கும்,
பல்கலைக்கழக மாணவர்கள்,
அரச ஊழியர்களுக்கான
விசேட ஆங்கில வகுப்பு

DURATION : 5 MONTHS

*Mr. SUBRAMANIAM*
*ஆரம்பம்* – நாளை (28.01.2002) 4 p.m.

நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(97580)



## IIS இன் விசேட அறிமுகம்

Technician Diploma in Radio, TV,
Computer and Electronic Equipment Servicing

Based on City & Guilds - U.K
Fully Practical Oriented

*Syllabus Includes:*
- Electronic Component Study
- Professional Circuit Study
- Related Trouble Shooting Study
- Computer Hardware Repairs

காலம் 8 மாதங்கள்

ஆரம்பம் 28-01-2002 மாலை 3 மணி

மேலதிக விபரங்களுக்கு
Director, IIS - Jaffna


# PUBLIC LECTURE

## Selected Findings of the National Youth Survey Sri Lanka 2000

28th January 2002

At the
Library Auditorium, University of Jaffna

Organised by
## University of Jaffna

In cooperation with
IMCAP/ University of Colombo
Jaffna Rehabilitation Project (JRP-GTZ)
South Asia Institute/ Colombo Office (SAI)

*Program*

| | |
|---|---|
| 9.30 - 10.00 | Welcome Note and Introduction<br>**Prof.P.Balasundarampillai**<br>*Vice Chancellor, University of Jaffna.* |
| 10.00 - 10.30 | Youth and Conflict in the North and East of Sri Lanka.<br>**Dr.Yuvi Thangarajah**<br>*Senior Lecturer, Eastern University.* |
| 10.30 - 11.00 | Rethinking Ethnic Tension in Sri Lanka: Comparing Jaffna & Hambantota.<br>**Dr.Markus Mayer** (Program - Co-ordinator IMCAP)<br>*Development Studies Institute, University of Colombo* |
| 11.00 - 12.00 | Panel Discussion |

**ALL ARE WELCOME**

(C/20496)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.